# பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி


காரியாலயம் :
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்.

| மாலை 4 | ஞாயிறு 5-5-40 விக்ரமஞு சித்திரைமீ 23உ | முத்து 5 |
| --- | --- | --- |

## பொருள் அடக்கம்

| விஷயம் | | பக்கம் |
| --- | --- | --- |
| உலக வர்த்தமானம் | | 122 |
| போகிற போக்கில் | | 124 |
| துணுக்குகள் | | 127 |
| உதிர்ந்த மணிகள் | | 128 |
| நைஷத கவியும் எருமைத் தயிரும் | ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ. | 129 |
| குரங்குக் குல்லாய் | "ராஜாராம்" | 131 |
| சிந்தனை | ஆர். பங்கஜம் | 132 |
| மனம்போல மாங்கல்லியம் | பத்மினி சிந்தாமணி | 134 |
| தக்ஷிண திலகம் | வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதி | 137 |
| ஷ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் | கா. சி. வேங்கடரமணி | 140 |
| "குழக்கட்டை—கிருஷ்ணன் தூது" | "தாசு" | 142 |

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




# உலக வர்த்தமானம்

ஜெர்மனி-நார்வே யுத்தம் வெகு தீவிரமாக நடப்பதாக வரும் செய்திகள் கூறுகின்றன. பிரிட்டிஷ்-பிரெஞ்சுக் காரர்கள், ஜெர்மானியர்கள், இருதிரத்தார்களுக்கும் கடற்படையிலும், நிலப்படையிலும், ஆகாயப்படையிலும், ஏராளமான சேதம் உண்டாயிற்று என்று தெரிகிறது. பிரிட்டிஷ்-பிரெஞ்சுத் துருப்புகள் நார்வேயினுட் புகுந்து நிலைமையைஒழுங்குக்குக் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிகிறது. எனினும் ஜெர்மன் விமானப்படை எடுப்பால் நார்வேயின் நகரம் ஒன்று சின்னபின்னமாக்கப்பட்டது என்று ராய்ட்டர் செய்தி கூறுகிறது.

இதுவும் தவிர யுத்தம் வேறெந்த நாட்டின்மீதும் பரவாமலிருக்க வேண்டிய முயற்சிகளை நேச நாடுகள் எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஸ்வீடன் கடற்கரை யோரத்தில் தீவிர கடல் யுத்தம் நடக்கிறதாம். ஸ்வீடனும் யுத்தக் களமாகி விடுமோ என்று எதிர்பார்க்கும் படியாக இருக்கிறது, நிகழ்ச்சிகளின் போக்கு. ஸ்வீடன் தற்காப்புக்கு வேண்டிய முயற்சிகளை சிறிதும் தயங்காமல் செய்து வருகிறதாகத் தெரிகிறது.

திடீரென்று ஸ்வீடனின் மேல் ஜெர்மனி பாய்ந்து விடுமோ வென்கிறதற்கு, ஜெர்மன் அயல் நாட்டு மந்திரி ரிப்பன்டிராப் விளக்கி பதில் கொடுத்திருக்கிறார். யுத்தம் நடு நிலைமை நாடுகளில் பரவியதற்குக் காரணம் பிரிட்டிஷ்—பிரெஞ்சுக்காரர்கள்தான், என்று கூறுகிறார். ஜெர்மன் படையை எதிர்க்க நேச தேசங்கள் செய்த சூழ்ச்சியால் தான் யுத்தம் வெளியே உலாவக் கிளம்பிற்று, என்று சவடால் கொடுக்கிறார். இன்னும் பிரிட்டிஷ் காரர்கள் செய்வது யுத்தத்தை ஸ்காண்டிநேவியா முழுவதும் பரவச் செய்யும் நோக்கத்தையுடையதாக இருக்கிறது என்று ஒரே போடாகப் போடுகிறார்.

இந்த ரிப்பன்டிராப் கூறும் விஷயங்களைக் கவனிக்கும்போது யுத்தம் திடீரென ஸ்வீடன்மீது பரவும் என ஊகிப்பது தவறல்ல என்பது விளங்குகிறது.

ரிப்பன்டிராப் நேச நாடுகள் மேல் போடும் குற்றச் சாட்டை பிரிட்டிஷ், பிரெஞ்சு ராஜ தந்திரிகள் பொருட்படுத்தவில்லை. "சுத்தப் புளுகு" என்று ஒரே யடியாக "கேஸை டிஸ்மிஸ்" செய்து விட்டார்கள்.

'ஹிந்து' பத்திரிகையின் லண்டன் நிருபர் யுத்த நிலைமையைப்பற்றி எழுதும்போது ஜெர்மனியின் திட்டத்துடன் கூடிய போக்கை விளக்கிக் காட்டுகிறார். "ஹிட்லர் கண்ணை மூடிக்கொண்டு நார்வேயில் காலை வைக்கவில்லை. அவர் தான் போட்டிருந்த திட்டப்படிதான் வேலையை நடத்துகிறார்" என்று எழுதுகிறார். "எப்பொழுது சமயம் வாய்த்ததோ அப்பொழுது தன் வேலையை ஹிட்லர் முடித்துக்கொள்ளாம லிருக்கமாட்டார்" என்று கூறுகிறார். தற்சமயம் ஹிட்லர் அடைந்த நஷ்டத்தைப் பெரிதாக நேச நாடுகள் கருதினால் அது அவர்களுடைய தவறுதான் என்று எழுதுகிறார். "ஹிட்லர் இதற்கென்றுதான் திட்டம் போட்டு வைத்திருந்தார். நார்வேயின் உற்பத்திப் பொருள்கள் ஜெர்மனிக்கு இன்றியமையாதவை; அதுவும் இந்த சமயத்தில். எனவே நார்வேயைத் தன் வசமக்கா முயற்சித்தார். ஸ்வீடனும் அப்படியே தான். அவர் அவா தீர்ந்தது. தன் லக்ஷியத்தை யடைந்தார். எனவே அவர் இழந்த கப்பல்கள் நார்வே, ஸ்வீடனின்

வீளை பொருள்களைத் தன் வசப்படுத்த, அவரால் வேண்டுமென்றே கொடுக்கப்பட்டபலி என்றுதான் சொல்லவேண்டும்" என்று விளக்கி எழுதுகிறார்.

யுத்தம் பால்கன் பிரதேசங்களிலும் பரவுவதற்கு ஹேஷ்யங்கள் எல்லாம் தெரிகின்றன.

## உள்நாட்டில்

இந்தியாவில் எங்கும் சுதந்திரப் பேச்சே கேட்கிறது. ஸெட்லண்டின் பேச்சு எல்லோரையும் கலக்கிவிட்டது. "மான்சஸ்டர் கார்டியன்" என்னும் ஆங்கிலப் பத்திரிகை, இந்தியாவின் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க, "சிறந்த சில இந்தியர்கள்" கூடிக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று கூறிற்று. அதற்குப் பதில் ராஜாஜி ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். "தேசத்தில்வகுப்புத் வேஷங்களைப் பிரிட்டிஷ்காரர்கள் தூபம் போட்டு பூஜை செய்யும் வரையில் 'சிறந்த சில இந்தியர்கள்' கூடி இந்திய நெருக்கடியைத் தீர்ப்பதென்பது முடியாத காரியம்" என்று கூறுகிறார். நெருக்கடியைத் தீர்க்க ஒரே வழி அரசியல் நிர்ணயசபையை அமைப்பது என்றுதீர்மானமாகக் கூறுகிறார்.

தேசத்தில் தேங்கி நிற்கும் நெருக்கடியைத் தீர்க்க ஸ்ரீ சத்தியமூர்த்தி கூறியபடி ஸர் ஜகதீஷ்பிரஸாதும், ஸர் என். என். சர்க்காரும் "எல்லா மாகாண பிரதம மந்திரிகளும் கூடிக்கலந்தாலோசிக்க வேண்டும்" என்று கூறுகிறார்கள். அதற்கு ராஜீனுமா செய்த காங்கிரஸ் மந்திரிகள் மீண்டும் பதவி ஏற்க வேண்டியதவசியம் என்று கூறுகிறார்கள். இவர்கள் பேச்சில் முக்கியத்வம் வகிக்கத் தகுந்தது ஒன்றும் இல்லை என்று அரசியல் வட்டாரங்களில் கருதப்பட்டு வருகிறது.

ஸெட்லண்டு பேச்சையும், அதற்கு இந்திய அரசியல் வாதிகள் கூறிய பதிலையும் கவனித்து, "நியூஸ் க்ரானிகல்" என்ற ஆங்கிலப் பத்திரிகை காந்திஜிக்கு ஒரு குறிப்பு அனுப்பிற்று. அதில் சில சிறந்த இந்திய அரசியல் மணிகள் ஒன்று கூடி ஆலோசித்தால் நிலைமை ஒழுங்கு படுவதற்கு வேண்டிய விஷயங்கள் வெளிவரும், என்று அப்பத்திரிகை கூறுகிறது. அதற்குப் பதில் காந்திஜி, "ஒத்துக்கொள்ளப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில சிறந்த இந்தியரைக் கூட்ட" சம்மதிப்பதாகக் கூறுகிறார். இது அவருடைய தனி அபிப்பிராயம் என்றும், தன் ஸகாக்கள் யாரையும் கலந்தாலோசிக்கவில்லை என்றும் கூறுகிறார்.


காந்திஜியின் இப்புதிய தீர்மானத்தை, சரியான முறையில் கையாண்டால் இந்திய அரசியல் நெருக்கடி தீரும் என்று பலர் கருதுகிறார்கள்.

காந்திஜி சட்ட மறுப்பு இயக்கத்தை இப்பொழுது ஆரம்பிக்கப் போவதாகத் தெரியவில்லை. எந்த முறையில் இவ்வியக்கம் ஆரம்பிக்கப்படும், தனிப்பட்ட நபர் சட்ட மறுப்பு செய்வதா, அல்லது ஒரு கூட்டத்தார் செய்வதா, என்பதைப் பற்றி காந்திஜி ஆலோசித்து வருகிறார் என்று தெரிகிறது. "எவ்விதப் போருக்கும், முக்கிய அங்கமான கதரை எல்லோரும் அணியவேண்டும். அதுவே தேசம் தயாராக இருக்கிறது என்பதற்கு சாக்ஷி. அதைக் கொண்டுதான் நான் மேல் பிரயத்தினம் எடுத்துக் கொள்ளப் போகிறேன்" என்று கூறுகிறார்.

புதிய டில்லியில் நடந்த ஆஸாத் முஸ்லீம்கள் மகா நாடு லீகர்களின் அர்த்தமற்ற இரு சமுதாயத் தீர்மானத்தை முறியடித்து விட்டது. மகா நாட்டில் தலைமை வகித்துப் பேசிய கான் பகதூர் அல்லா பக்ஷ் இந்தியாவில் முஸ்லீம்களின் நிலைமையை விவரித்துக் கூறினார். ஜின்னாவின் கொள்கைகளை தேசீய முஸ்லீம்கள் கையாண்டால் இந்தியாவுக்கு சுயேச்சை என்பதே எட்டாத கனியாக ஆய்விடும் என்று கூறினார். தேசீய முஸ்லீம்கள் இந்தியாவைத் தங்கள் தாய் நாடாகப் பாவிக்கத் தீர்மானித்தார்கள். தேசத்தின் நலத்திற்கு தேசீய மக்கள் பாடுபட்டுப் பிரசாரம் செய்வதாகக் கங்கணம் கட்டிக்கொண்டார்கள்.

இந்திய வகுப்புப் பிரச்னை வலுத்து இருக்கும் இச்சமயத்தில் தேசிய முஸ்லீம்கள் சுயேச்சைக்குப் பாடுபட முன் வந்தது பற்றி எங்கும் திருப்தி பொங்குகிறது.

# போகிற போக்கில்



வெகு நாள் ஆய்விட்டதே. இன்றைய சாயந்திரமாவது பீச்சுக்குப் போகவேண்டாமா, என்று எண்ணி, செருப்பை மாட்டிக்கொண்டு, வீட்டை விட்டுக் கிளம்பினேன். மோட்டார்கார் தோணிபோல் ஓடுவதற்காகக் கருங்கல்லால் செப்பனிடப்பட்டு, 'தாரா'ல் கோலம் போடப்பட்ட ரோட்டில் பாமர ஜனங்கள் நடக்க வேண்டுமானால் தோல்கிடங்குக்குத் தக்ஷிணை இரண்டு ரூபாய் செலுத்தவேண்டியதுதான். மனுஷ்யவாழ்வின் காமக் குரோதங்களுக்குக் காரணம் இந்த ஹிம்ஸைதான்—பாதரக்ஷையால் ஏற்படும் அன்னிய ஜீவனின் இயற்கையற்ற பாபப்பிரயோகம். காலுக்குப் பூமி குழந்தைக்குத் தாயின் மடிபோல் புண்ணிய பூமி அல்லவோ? பாதரக்ஷை ஏன்?

* * *

இப்பேர்ப்பட்ட அரிய வேதாந்தங்களையும் தத்வ விசாரணைகளையும் செய்துகொண்டு, மெய்மறந்து காருண்ய வெள்ளத்திலாழ்ந்து சென்னை ரோட்டுகளில் நடந்து சென்றால், மோட்டார்காருக்கு இரையாகி விடுவோமோ என்று பயந்து எண்ணத்தை மாற்றினேன். நவீன நாகரீகத்தால் அஹிம்ஸா தர்மம் ஜீவனற்ற பொருள்களுக்கும் எட்டியிருக்கிறது அல்லவா—முக்கியமாய் மோட்டார் காருக்கு.

* * *

பீச்சுக்குப் போய் எவ்வளவு நாள் ஆய்விட்டது. இன்றைய தினமாவது கடலோரம் சென்று, நிலாவின் அழகில் ஆழ்ந்து, மணலில் அலையோரம் கொஞ்சம் கிளிக்கூடு கட்டலாமென்று நினைத்தேன்.

சென்னை மெரினா உலகத்திற்குள் மிக அழகு வாய்ந்த கடற்கரை யென்று உலக சஞ்சாரம் செய்தவர்கள் பலர் எழுதப் பார்த்திருக்கிறேன். ரயோடி ஜெனிரோவுக்கு அடுத்தபடி சென்னைக் கடலோரமென்று சொல்லுவார்கள். இந்தியா அடிமை நாடாகையால் முதன்மை ஒன்றிலும் நமக்குக் கிடைக்காது. இந்த அழகை வெகுகாலம் வீணாக்கலாமா வென்று எண்ணி விரைந்து சென்றேன்.

* * *

கொஞ்ச தூரம் கடந்தவுடன் எனக்குத் தெரிந்தவர் ஒருவர் மிட்டாய் கடை சந்திலிருந்து கையில் பிரம்புடனும், பேப்பருடனும் கிளம்பிவந்து என்னுடன் சேர்ந்துகொண்டார். இருபது வருஷத்திற்கு முன் நானும் அவரும் ஒரே ஹோட்டலில் சேர்ந்து ஒருமாதம் சாப்பிட்டோம். அவருக்கு மோர்க் குழம்பில் மிகப் பிரியம். அவர் பெயர் மாதவராவ். சென்னை ஹைகோர்ட்டில் 'ஒரிஜினல் சைடில்' வெகு காலம் வக்கிலாக 'பிராக்டிஸ்' செய்துவிட்டு, இப்பொழுது சமீபத்தில் 'ஸ்மால் காஸில்' இறங்கி அங்கேயே தங்கிவிட்டார். சாந்தத்தையும் அடைந்தார். வெறுப்பு அடையவில்லை. எந்தப் பெரிய வேலைகள் காலியானாலும் அவருக்கு படபடப்பில்லை. வேர்த்து விருவிருப்பும் இல்லை. பெட்ரோல் செலவுமில்லை. என்னைப்போல் அவரும் பாதசாரி.

இந்த 'ஸ்மால் காஸ் கோர்ட்டி'ல் தேங்கி நின்ற வாழ்க்கையை பரலோக சாதகத்திற்காவது பயன்படுத்த வேண்டுமென்று அவாகொண்டு புஸ்தகங்களையும், பத்திரிகைகளையும் படிக்க ஆரம்பித்தார். அவர்

காலேஜில்—தெப்பகுளம் காலேஜில் நீஞ்சி முதலில் கரையேறினவர்—சரித்திரத்திலும், பொருளாதாரத்திலும் மெடல் வாங்கினவர். ஆகையால் இப்பொழுது ஒழிவு கண்டு தினசரி ஒரு அணு கொடுத்து "ஹிந்து" பேப்பர் வாங்கி, ஆதி முதல் அந்தம் வரை ஒரு சொல் விடாமல் வாசித்து, கரைத்துக் குடித்து, ராய்ட்டர் தந்திகளை தெய்வ வார்க்கியமாய்ப் பாவித்து, ஒழிந்த வேளையில், ஜட்ஜ்களை கூட மடக்கக்கூடிய சாமர்த்தியத்துடன், தன் வாசல் திண்ணையில் வாக்குவாதம் செய்து வருவார். 'ஸ்மால் காஸ் கோர்ட்டில்' கையை வீசினுல் போதுமே. சட்ட புஸ்தகங்கள், கட்டுகள் இவைகளின் நிர்ப்பந்தமில்லையே. மூளையைப் புரட்டும் கேஸ் லாவின் செடுக்குகளும் இல்லை. வெள்ளரி விதையை உரிப்பதுபோல் நகக்கணு அவஸ்தையுமில்லை. இவ்விதமான ஹிந்து பேப்பர் பயிற்சியினுல் மாதவ ராவுக்கு 'ஸ்மால் காஸ் கோர்ட்டி'ல் 'கிளாட்ஸ்டன்' என்கிற பெயர் ஏற்பட்டு விட்டது. இதை விநயத்துடன் வகித்தார். ஆகையால்தான் எப்போதும் வெளி வந்தால் கையில் பிரம்பும் பேப்பரும்.

* * *

நான் இவரைக் கண்டு பேசி வெகு காலமாய்விட்டது. அரசியல் தர்க்கத்தில் இவ்வளவு தேர்ச்சியிருக்கும் என்றுகூட எனக்குத் தெரியாது. பிறகு விசாரித்ததின் பேரில்தான் தெரிந்துகொண்டேன்.

"என்ன, சார், மணி ஐயர், ரொம்ப நாளாய் உம்மை இந்தப் பக்கம் காணுமே?"

"ஆமாம், ராயர்வாள், அலைந்து கொண்டிருந்தேன்" என்றேன்.

நான் ஆசிரியரானது இந்த 'கிளாட்ஸன்' காதில் இன்னும் எட்டவில்லை.

"அரசியல் உலகத்தைப் பார்த்தேளா? என்ன ஆச்சரியம். ஹிட்லருக்கு மாத்திரம் பைத்தியம் பிடிக்கவில்லை. உலகமேதான் பித்தாகிக்கொண்டு வருகிறது. நான் ஒரு 'அஸ்ட்ரானமர் அஸ்ட்ராலஜரை'க் கேட்டேன், இது ஏன் இப்படி என்று. அவர் சொன்னுர், சூரியனில்களங்கங்கள் (Sun spots) அதிகரித்து வருகிறதாம். ஆகையால்தான் பூமிக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. ஜனுப் ஜின்னுவைப் பார்த்தீர்களா? இந்தியாவை பாகம் போடவேண்டுமாம். இந்த சமயத்திலல்லவோ நமக்கு ஓர் சிவாஜி தலைமை வகிக்க வேண்டும். ஹிந்துக்களின் பராக்ரமத்தை ஒன்று சேர்த்து......"

இவர் தன் உபந்யாசத்தை முடிக்குமுன் ஓர் அழகிய 'ஸெடான்'கார் எதிர்நோக்கி வந்துகொண்டிருந்தது. அதை மாதவராவ் கொஞ்சம் உற்றுப்பார்த்து, கையைக் காட்டி நிறுத்தி, அந்த காரில் தன் சொந்தகார் போல், தன் வாக்கியத்தைக் கூடப் பூர்த்திசெய்யாமல், ஏறிக்கொண்டு விட்டார். டிரைவருக்குப் பக்கத்தில் வணக்கமாய் உட்கார்ந்து கொண்டார். என்னிடம் போய் வரேனென்று கூடச் சொல்லிக் கொள்ளவில்லை. தனக்குக் கிடைத்த பாக்கியத்தில் என்னை மறந்தார். காருக்குள் பார்த்தேன். ஒரு படே சாயபு உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருக்கு மரியாதையாய் மாதவ ராவ் சலாம் போட்டார்—அவருடைய முக்கியமான கட்சிக்காரராய்த்தான் இந்த முஸ்லிம் பிரபு இருக்கவேண்டுமென்று எண்ணினேன். இந்த காருக்குள் அமைந்திருக்கும் ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையைக் கண்டு வியந்தேன். சிவாஜியின் ஞாபகம் வந்தது.

* * *

நான் தனிவழியேபோகும்பொழுது இந்த காட்சி என் மனதைவிட்டு விலகவில்லை. நமது நாட்டில் உண்மையில் வளர்ந்துவரும் ஒற்றுமையை அரசியல் சுயநல வெள்ளமல்லவோ அழிக்கப்பார்க்கிறது. ஜின்னுவின் பாகபத்திரத்திற்கு மூல காரணமென்ன. 1906-ல் ஊன்றப்பட்ட தனித்தொகுதியாகிய வித்தல்லவோ இந்த விஷ விருக்ஷமாய் முளைத்து, வளர்ந்து, கோபுரத்தைக்கூடப் பிளந்து விடும் போலிருக்கிறது. மேல் நாட்டு நாகரீகமும், அரசியல் வழிகளும், பொருளாதார முறைகளும் எங்கு போனுலும் போட்டியைக் கிளப்பி ஒற்றுமையை அழித்து வேற்றுமையைச் செய்கிறதே

ஆயிரம் வருஷம் பாடுபட்டும், இன்னும் ஐரோப்பாவில் எவ்வளவு தேசப் பிரிவுகள் இருக்கின்றன. வேற்றுமை விழாவே மேல் நாட்டு நாகரீகத்திற்கு ஜீவதாதுவா? இதுதான் அழியாப் போருக்குக் காரணமா? இவ்வாறு நினைத்துக்கொண்டே, தனி அசவு போட்டுக்கொண்டு போனேன்.

* * *

அதற்குள் 'பேபி ஆஸ்டினு'க்கு தவம் கிடந்த சாவித்திரியின் புருஷன்—அவர் பெயர் எனக்கு இச் சமயம் ஞாபகம் வரவில்லை; தற்காலத்திற்கு அவர் வக்கீலாகயிருந்தாலும் சத்தியவான் என்று வைத்துக்கொள்ளவும் — என் பழைய நண்பர் வந்தார். மகா பாரத யுத்தத்தைத் தன் புன்சிரிப்பில் அடக்கக்கூடிய ஓர் புன்சிரிப்புடன் என்னை எதிர்கொண்டழைத்தார். அவர்கூட தன் ஏராள கேஸ்லாவை எப்படியோ மறந்துவிட்டு, எடுத்தவுடனே ஜனுப் ஜின்னுவைப்பற்றிப் பேச ஆரம்பித்தார், ஆச்சரியம் அடைந்தேன். ஜின்னுவின் புலி வேஷத்தின் வெற்றியைப் பற்றி உலகத்திற்கே பைத்தியம் பிடித்துவிட்டதென்று தீர்மானித்தேன். மாதவராவ் சொன்னது சரி. சூரிய களங்கங்கள் அதிகரித்துக்கொண்டுதான் வருகிறது.

மணி

---


# ஒரு நிமிஷம்!

★ ★

மனதைக் கவரும் இனிய கதைகள் — அறிவையூட்டும் அழகிய கட்டுகரைகள்

# பாரத மணி

● ●

வருஷ சந்தா
உள்நாடு ரூ. 4
வெளிநாடு ரூ. 6

நீங்கள் உங்கள் சந்தாவை அனுப்பிவிட்டீர்களா?

✻ தனிப் பிரதி விலை ஒரு அணா. ✻

**இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.**

# துணுக்குகள்

அகில இந்திய தேசியத் திட்டக் கமிட்டிக் கூட்டத்திற்காக வி. வி. கிரி பம்பாய் செல்கிறார். 29 உதவிக் கமிட்டிகளும் அதனதன் வேலையைச் செவ்வனே செய்து முடித்து விட்டன. அவற்றின் 'ரிபோர்ட்டுகள்' மே 2௳ ஜவஹர்லால் நேருவின் தலைமையின்கீழ் கூடப்போகும் கமிட்டியின்முன் சமர்ப்பிக்கப்படும். 29 உதவிக் கமிட்டிகளின் ரிபோர்ட்டுகளை யனுசரித்து பம்பாய் கூட்டத்தின் தீர்மானம் காங்கிரஸ் காரியக்கமிட்டி முன் சமர்ப்பிக்கப்படும். பிறகு முன் திட்டப்படி இத் தீர்மானங்களை நிறைவேற்ற தேசியத் திட்டக் கமிஷன் வேலைசெய்ய ஆரம்பிக்கும்.

* * *

நெல்லூரில் நடந்த இரண்டாவது விவசாயத் தொழிலாளிகளின் மகாநாட்டில் தலைமைவகித்துப் பேசும்போது டாக்டர் பட்டாபி ஸீதாராமய்யா சில முக்கிய சீர்திருத்தங்களைக் கோரினார். இன்னும் திருப்தியளிக்கக்கூடிய முறையில் நிலங்களை ஜனங்களுக்குப் பிரித்துக் கொடுப்பது; சாதாரணமாக நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் இவ்வளவுதான் சொந்தமாக வைத்துக் கொள்ளலாம் என்று நிர்ணயிப்பது; விவசாயத் தொழிலாளிகளுக்கு வேண்டிய சட்டங்களைக் கொண்டு வருவது; கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவது போன்ற பல சீர்திருத்தங்கள் அவசியம் என்பதைக் குறிப்பிட்டார். அவர் அபிப்பிராயப்படி கூட்டுறவுச் சங்கங்கள் தாங்களே கடன் வாங்கி தங்கள் ஆதீனத்தின்கீழ் விடப்பட்ட நிலங்களை பெரும் பண்ணை முறைப்படி சாகுபடி செய்யும். பலனை சங்க அங்கத்தினர் பகிர்ந்து கொள்வார்கள்.

* * *

சென்னை கிறிஸ்தவ கலாசாலையின் கலாசாலைத் தினத்தின் தங்கவிழாக் கொண்டாட்டம் வரப்போகும் டிஸம்பர் 31௳ யிலும் ஜனவரி 1௳ யிலும் நடைபெறும். பெனரிஸ் சர்வகலாசாலையின் வைஸ் சேன்ஸலர் ஸ்ரீ ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் கொண்டாட்டத்தில் தலைமை வகிப்பார்.

* * *

நெல்லூரில் நடந்த பத்தாவது ஆந்திர மாகாணக் கூட்டுறவு மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசும்போது ஸ்ரீ ராமதாஸ் பந்துலு கூட்டுறவுச் சங்கங்களால் விவசாயிகளுக்குக் கிடைக்கும் உதவிகளை எடுத்து விவரமாகக் கூறினார். "கிராமங்களின் புனருத்தாரணத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபடவேண்டும்" என்று வற்புறுத்தினார்.

* * *

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை எழுதுகிறது :—

யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்காவின் பொதுஜன அபிப்ராய ஸ்தாபனம் "ஜெர்மனி பிரிட்டனையும், பிரான்ஸையும், தோற்கடிக்கும் போலிருந்தால், அமெரிக்கா ஒரு படையை பிரிட்டனுக்கு அனுப்பலாமா," வென்று அமெரிக்கர்களைக்கேட்டதாம். அதற்கு பதில், யுத்தம் ஆரம்பிக்கும்போது, 100 க்கு 44 பேர்கள் அனுப்பலாம் என்று ஒத்துக் கொண்டார்களாம். யுத்தம் தொடங்கி ஒரு மாதம் கழிந்த பிறகு 100-க்கு 29 பேர்களும், ஆறுமாதம் கழிந்த பிறகு 100-க்கு 23 பேர்களும்தான் ஒத்துக் கொண்டார்களாம். இதற்குக் காரணம் பிரிட்டன் இந்தியா சம்பந்தமாகச் செய்யும் வேலைகள் தானே என்று சந்தேகிக்காமல் இருக்கமுடியாது.

* * *

கோலார் தங்க வயல் மகிளா சமாஜத்தின் முதல் ஆண்டுவிழா மைசூர் சமஸ்தானத்தின் முதல் மந்திரியாகிய ராஜ மந்திரப் ப்ரவீண என். மாதவ ராவ் அவர்களின் மனைவியின் தலைமையில் 'கிங் ஜார்ஜ்' ஹாலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. சுற்றுப் பிரதேசத்திலிருந்து பல பெண்மணிகள் வந்து விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார்கள். ஸங்கீதம், நர்த்தனம் முதலிய கேளிக்கைகள் முடிந்ததும் சமாஜத்தின் தலைவி ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாஸன் அன்றைய விழாவில் அக்கிராஸனம் வகித்து கலந்து கொண்ட அம்மைக்கும், மற்றும் பிரஸன்னமாயிருந்த பலருக்கும் தன் வந்தனோபசாரங்களைச் செலுத்தினர். அதுடன் விழா இனிதே முடிவடைந்தது.

# உதிர்ந்த மணிகள்

"நாம் வாழும் இக்காலத்தைக் குழந்தைகள் யுகம்" என்று சொல்லலாம். (வெளி நாடுகளிலெல்லாம் குழந்தைகள் சுகத்தைக் கண்ணுங் கருத்துமாகக் கவனிக்கிறார்கள்.) ஆனால் நம் நாட்டில் இன்னும் இக் 'குழந்தைகள் யுகம்' பிறக்கவில்லை. குழந்தைகளைப் பற்றி அதிகக் கவலை செலுத்தவில்லை. நாம் உண்பதிலும் சரி, உடுப்பதிலும் சரி, விளையாட்டுச் சாதனங்களிலும் சரி, கல்வி விஷயத்திலும் சரி, இந் நாட்டில் குழந்தைகள் தங்கள் உரிமையைப் பெறவில்லை. இடைத்தரக் கல்விச் சாலைகள், தேசியப் பொது வாழ்வில் உள்ள நூற்றுக்கெழுபது உத்தியோகஸ்தருக்கு வேலை கொடுக்கிறது. இக் கல்விச்சாலைகளில் கற்றுத் தேறியவரே ரயில்வேயிலும், ஆலைகளிலும், கல்வி நிலையங்களிலும், சர்க்கார் காரியாலயங்களிலும் வேலை செய்கின்றனர். இப் பெரும் வேலையில் ஈடுபட்டுள்ள இடைதரக் கல்விச் சாலைகள் சர்க்காரிட மிருந்தும், பொது மக்களிடமிருந்தும் அதிக ஆதரவை எதிர்பார்க்கின்றன. பொது மக்களும் தங்கள் கடமையில் தவறியுள்ளதை மறுக்க முடியாது."

—மகாகனம் சாஸ்திரி.

* * *

மாகாண சுயாட்சி அமுலுக்கு வந்த பிறகு, ஆங்காங்கே கலையபிவிருத்தியை மாகாண சர்வ கலாசாலைகள் கவனித்துக் கொள்ளுகின்றன. இந்நிலையில் அகில இந்தியக் கலையபிவிருத்தியைக் கவனிக்க டில்லி சர்வகலாசலையைத் திருத்தியமைக்க வேண்டும். இந்தியரின் ஐக்கிய பாவத்தை வளர்க்க இது பயன்படும். தலைநகர் வாழ்க்கையே பரந்த நோக்கத்தைப் பயில்விக்கும். பல்வேறு பாகங்களின் கலை வளர்ச்சியைத் தனிக்கை செய்யும் தனி நிலயமாய் அமையும். வருங்கால அரசியலை நடத்தப்போகும் அறிவாளிகளைத் தோற்றுவிக்கும். தவிர, சமஸ்தான மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பமக்ளிகப் பயன்படும். அரசியல் ஐக்கியத்தைத்தவிர, அறிவு வளர்ச்சியும் இப் பாதையில் செல்லும். பிரிட்டிஷ், சமஸ்தான மக்களாகிய அண்டை வீட்டுக்காரர் அன்னியோன்னிய பாவத்துடன் கலை வளர்ச்சியில் ஈடுபட்டிருத்தல்கூடும். இப்பெருஞ் சேவையில் ஈடுபடும் டில்லி சர்வ கலாசாலையின் வெற்றியில் இந்திய சர்க்கார் அலட்சியமா யிருக்க முடியாது.

* * *

"நிரந்தர சமாதானத்திற்கும், அமைதியான ஐக்கிய பாவத்திற்கும், உண்மையாக அடிக்கோல வேண்டுமாயின், மனிதன் குறுகிய மனப்போக்கையும், முழு அறிவற்ற பகுத்தறிவையும் விட்டு, உன்னத அறிவு நிலையை எய்தவேண்டும். அமைதியான மனத்தில்தான் இவ்வுண்மை உணர்ச்சிநிலை கிட்டும். ஆகையால் யோக சோதனையின் முதல்வேலை இவ்வமைதியான நிலையைப் பெறுதலேயாம். இயக்கமற்ற, நிசப்தமான, அமைதி நிலவும்படி மனதைக் கட்டுப்படுத்தல் கூடுமோ? தூக்கத்திலும் மனம் சிந்தனை வேலையில் ஈடுபட்டுள்ளதல்லவா? இங்கு நாம் ஒரு வித்தியாசத்தைத் தெளியவேண்டும். அநேகமாய் எப்பொழுதும் மனதில் சிந்தனை அலைகள் பரவியிருப்பினும், நாம் எப்பொழுதும் யோசனையிலும், பகுத்தறிவதிலும் ஈடுபட்டிருப்பதில்லை. அநேக சமயங்களில் நாம் ஒன்றும் மும்முரமாய் சிந்தனை செய்யாமலிருந்தாலும், எங்கிருந்தோ எண்ணங்கள் நம் மனதில் உதித்தபடி யிருக்கின்றன. அவைகளுக்கே தனி சுயேச்சை வாழ்விருப்பதாகத் தோன்றுகிறது. நம் மனம் வேடிக்கை பார்க்கும் மூன்றும் மனிதனைப் போலவோ, பக்கத்திலிருக்கும் சாக்ஷியைப் போலவோ யிருக்கையில், எண்ண அலைகள் ஒன்றோடொன்று பிணைந்து பலவிதமாக உருப்படுகின்றன." —ஸ்ரீ. அனில்பாரன் ராய்.

# நைஷத கவியும் எருமைத் தயிரும்

[ய. மஹாலிங்க சாஸ்திரி, எம். ஏ., அண்ணாமலை நகர்]

ஸ்ரீஹர்ஷர் ஓர் நைஷ்டிக பிரும்மசாரி. ஹீரபண்டிதரின் புதல்வர். தன் பிதாவைப் பங்கப் படுத்திய ஒரு வித்வானை வாதத்தில் ஜெயித்து பிதாவின் கீர்த்தியை நிலை நிறுத்துவதற்காக கங்கணம் கட்டிக் கொண்டு நாடெங்கும் சென்று வித்தியாப் பியாஸம் செய்து தன் ஸங்கல்பத்தை கன்யகுப்ஜத் தரசனான ஜயந்தசந்திரன் சபையில் நிறைவேற்றிய தீரர்.

ஜயந்தசந்திரனால் வித்வத் கோஷ்டியில் அக்ர ஸம்பாவனை யளிக்கப்பட்டவர். "நர பாரதி" என்று தற்காலத்தவர்களால் புகழப் பெற்றவர். ஸம்ஸ்கிருதத்தில் பஞ்ச மஹா காவியங்களென்று கொண்டாடப் படும் ஐந்து காவியங்களுக்குள் சிகரம் போன்றதும், கடைசியானதுமான நைஷதத்தை இயற்றியவர். இவர் சிந்தாமணி மந்திரம் என்ற மந்திரத்தின் ஸாதனத்தால் நிகரற்ற மேதாவி யானார். இவருடன் எவரும் வாதத்திற்கு முன்வர நடுக்க முற்றனர். இவருடைய சொற்களின் தாத்பர்ய மறிவதே புலவர்களுக்கும் கிட்டாததாயிற்று. ராஜ ஸதஸ்ஸுகளில் இவர் கல்பனைகளையும் யுக்திகளையும் விரைந்து பின்பற்றி அர்த்தம் செய்து கொள்ள முடியாமல் பண்டித மணிகள் தலை குனிந்தனர். அவர் சொற்களே இப்பாடு பட்டால் கட்டிய காவியம் எவ்விதமாகும்? முதலில் இவர் நைஷதத்தை ஐம்பது ஸர்க்கங்களில் லியற்றி அரங்கேற்ற ராஜ சபைகளை நாடினார். எங்கும் இவருடைய துருஹமான வாக்கின் கருத்தறிய முடியாத வித்வான்கள் கலங்கினர். ஸ்ரீ ஹர்ஷர் லோகத்தின் புத்தித்திறமைக்கு எவ்விதத்திலும் எட்டாத தன் மேதாவித் தனத்தைப் பயனற்றதென்றுநொந்து கொண்டார். உலகத்தில் எந்த வித்வானுடனும் வித்யா விஷயத்தில் கலந்துகொள்ள முடியாமல் செய்த தன் புத்திநுட்பத்தை சிறிது மழுங்கச் செய்து கொள்ள உபாயம் தேடலானார். வாக் தேவியினிடம் தன் வியாகூலத்தைத் தெரிவித்துக்கொண்டார். தேவி "இதற்கு எருமைத் தயிரே உபாயம்" என போதித்தாள். ஸ்ரீ ஹர்ஷகவி எருமைத் தயிரை கொஞ்ச காலம் வெகு ருசியுடன் உபயோகித்து வந்து, பின்பு தன் புத்தி கூர்மை சிறிது குன்றியதறிந்து நைஷதத்தை சுருக்கமாய் இருபத்திரண்டு ஸர்க்கங்களில் இயற்றி ராஜ சபையில் அரங்கேற்றி வைத்தார். இவ்விதமாகியும் நைஷதம், வித்வான்களே வெகு சிரமப் பட்டுச் சுவை அறிந்துகொள்ளக்கூடிய நிலைமையில்தான் இப்போதும் இருக்கிறது.

பெரியோர்கள் பரம்பரையில் வழங்கி வரும் இக் கதை உண்மையை ஓட்டினதென்றே நாம் மதிக்க இடமிருக்கிறது. ஏனெனில் நைஷதகர்த்தா ததிப்பிரியர் என்பதில் சந்தேகமே இல்லை. இல்லாவிட்டால் நாக்கில் ஜலம் சொட்டும்படி எருமைத் தயிரை இவர் காவியத்தில் வர்ணிப்பாரா? நளன் விவாகத்தில் அரசர்கள் விருந்துண்டனராம். அதில் எருமைத் தயிர் விசேஷமாம். பாருங்கள் வேடிக்கையை! தயிர் எப்படி இருந்தது தெரியுமா! கற்கண்டை பனிநீரால் வெண்ணை போல் அரைத்து உண்டாக்கியதோ; அல்லது அமிர்தம் தங்கும் மடுவில் மூழ்கி எடுக்கப்பட்ட சேறோவென நினைக்கும்படி இருந்ததாம். அத் தயிர் மறப்புப்படும் எருமையின் பாலினால் உண்டானதாம். எருமையிலும் இளங்குத்தி மாட்டுப்பால் இறுகியிராதென்ற தாத்பர்யம். பேர்வழி தயிர் திட்டத்தில் கரை கண்டவர் என்பதற்கு என்ன ஆக்ஷேபனை? இது மட்டுமா? உலகத்தையும் படைத்த பிரும்மா தயிரையும் சிருஷ்டித்தாரல்லவா? எதிலும் ஆசை வைக்காத பிரும்மதேவனுக்கு, தான் படைத்த (நளன் விவாஹத்தில் பரிமாறிய) தயிரைப் பார்த்ததும் நாக்கில் ஜலம் ஊறிற்றாம். ஆனால் வெட்கத்தினால், எடுத்தது தெரியாமல் ஸாரமான அம்சத்

தைத் திருட உத்தேசித்தாராம். ஸர்வ மாயா சக்தியுமுள்ள பிரும்மதேவனுக்கு நாஸுக்காக அபஹரிப்பது சிரமமில்லையல்லவா? இஷ்டபூர்த்தி செய்துகொண்டார் பேர்வழி. ரயில் கூட்ஸில் போடப்பட்ட அரிசி மூட்டையில் ஊசிபோட்டு உருவி இழுக்கும் திறமைக்கு வழிகாட்டினர். அவர் அத்தயிர் பானங்களில் ஸாராம்சத்தை ஆங்காங்கு கிரஹித்துவிட்டார் என்பதற்குப் போதுமான ருஜுவுமிருக்கிறது. நன்ருய்த் தோய்ந்த தயிரில், பாறையில் பாணம் பாய்ந்ததுபோல் பலதுளைகள் தென்படுகின்றன வல்லவா? அவை எதைக் குறிக்கின்றன? பிரும்மா கை வைத்த இடத்தைத்தான். அதில் என்ன சந்தேக மிருக்கிறது. பேர்வழி திருடனிலும் மாயத்திருடன், என்கிருர் எருமைத் தயிர் புலவரான ஸ்ரீ ஹர்ஷ மஹாகவி. என் வார்த்தையில் நம்பிக்கையில்லா விட்டால் நைஷதம் 16 வது ஸர்க்கம் 93, 94 வது ச்லோகங்களைப் படித்துப் பார்த்துக் கொள்ளலாம். எருமைத் தயிரினல் புத்தி மழுங்கும் என்பதற்குக் காளிதாஸரும் ஓர் அத்தாக்ஷி. புத்தி கூர்மை யில்லாதவனை எருமை மாடு என்று கூப்பிடுவது உலகத்தில் வழக்கம். மாட்டின் மட்டித்தனம் பாலுக்கும் அதன் திரிபான தயிருக்கும் பரவுகிறது போலும். முன் போஜ ராஜன் கவிகளுக்கே ஸம்மான மளிப்பவனுகவும் வெறும் பண்டிதர்களுக்கோ வேத வித்துக்களுக்கோ ஆதரவளிக்காதவனுயு மிருந்தான். அப்போது வறுமையினல் பீடிக்கப்பட்ட சில வேத வித்துக்கள் அரசனைப் பார்க்க ஓர் ச்லோகம் கவனம் செய்ய பிரயத்தனப் பட்டார்கள். அவர்களுக்கு எவ்விதமான, அர்த்த புஷ்டியும் அலங்காரமும் சொல்லழகும் பொருந்திய, ச்லோகத்தையும் இயற்ற திறமை யில்லாததினல், ஏதோ ச்லோகமென்ற பெயருக்கு ஒன்று இருந்தால் போது மென்று நினைத்து, "அரசே, நெய் பருப்போடு கூடிய போஜனத்தைத் தரவேண்டும்" என்ற தாத்பர்யத்தை வைத்து பாதி ச்லோகம் வெகு பிரயாஸப்பட்டு எழுதி முடித்தார்கள்.

ஆனல் ச்லோகத்தைப் பூர்த்திசெய்யும் வழி தெரியவில்லை. அரை ச்லோகத்தை எப்படி அரசனிடம் தெரிவிப்பது? இவ் விதம் அவர்கள் கலங்கி நிற்கும் சமயத்தில் காளிதாஸ கவி அவ்விடம் வந்தார். பிராமணர்கள் தங்கள் கஷ்டத்தை அவரிடம் தெரிவித்துக் கொண்டார்கள். கவி "நீங்கள் இவ்வளவு மூடர்களா" என்று மனதில் நினைத்துக்கொண்டு, ச்லோகத்தின் பிற்பாதியை இயற்றிக் கொடுத்தார். அதில் "அடே எருமைக் கிடாக்களா! உங்களுக்கு இதுவே தகும்" என்று சொல்வதுபோல், "எங்களுக்கு எருமைத் தயிர் வேண்டும், சரத் காலத்து சந்திர வெளிச்சம்போல் வெண்ணிறமான எருமைத் தயிர்" என்ற பிரார்த்தனை அமைக்கப் பெற்றிருந்தது. எருமைத் தயிரின் மஹிமையைக் காளிதாஸரும் எப்படி வெளிப்படுத்தியிருக்கிருர் பார்த்தீர்களா?

ஆனல் ஸ்ரீ ஹர்ஷரின் புத்தி கூர்மை எருமைத் தயிருக்குக்கூட அதிகம் மழுங்காத ஆணிவேர் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. சில ஸங்கீத வித்வான்களுக்கு துளி சாரல் பனி பட்டுவிட்டால் தொண்டை கட்டிவிடும். சிலர் இரவில் மூன்ருவது கிளாஸில் பிரயாணம் செய்துவிட்டு, பகலில் தூங்கிவிட்டு, புளித்த மோரையும் குடித்துவிட்டு, கொஞ்சமும் சளைப்பு இல்லாமல் கச்சேரி செய்வார்கள். காளிதாஸர் முதல்வர்க்கத்தைச் சேர்ந்தவரானல் ஸ்ரீஹர்ஷர் பின் வர்க்கத்தைச் சேர்ந்தவர். எருமைத் தயிரையும் விழுங்கிவிட்டு தீக்ஷண்யமாய் விளங்கும் மேதா சக்தியினல் அவர் இயற்றிய நைஷதம், இன்னும் "நைஷதம் வித்வதௌஷதம்" என்று வித்வான்கள் கூட பயபக்தியுடன் போற்றும்படியானதாகத் தானிருக்கிறது.

# குரங்குக் குல்லாய்

"ராஜா ராம்"

சுப்புசாமி அய்யர், ஒரு சிறிய சூட்கேஸை கையில் பிடித்தபடி, ஸ்டேஷனில் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டிருந்தார். ரயில் இன்னும் வரவில்லை.

"இன்றைய ஹிந்து படிக்க வில்லேயே" என்று முணு முணுத்துக்கொண்டு 'ஹிக்கின் பாதம்ஸ்' புத்தகசாலையை அண்டினர். சூட்கேஸை சற்று கீழே வைத்துவிட்டு ஹிந்து வாங்கி நின்றபடியே வாசிக்கலானர். "அடே, ஜின்ன இவ்வளவுக்கு வந்துட்டான்ன!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டார்.

இதற்குள் ரயில் வரும் சத்தம் கேட்டது. உடனே பக்கத்திலிருந்த சூட்கேஸை எடுத்துக்கொண்டு வண்டியிலமர்ந்தார்.

அன்று இரவு சுப்புசாமி அய்யர் குற்றாலத்தில் ஒரு ஹோட்டலில் தங்கினர். ஒரு தனி அறை தனக்கு அமர்த்திக்கொண்டார். அன்று குளிர் மிகவும் அதிகம். சாப்பிட்டுவிட்டு படுக்கப் போகும்போது தன் குரங்குக் குல்லாயை எடுக்க தன் சூட்கேஸைத் திறந்தார். அதன் உள்ளிருந்த சாமான்களும் உடைகளும் சுப்புசாமி அய்யரைத் திடுக்கிடச் செய்தன. தன் வேஷ்டி, துண்டு, வெளுத்த ஷர்ட்டு, குரங்குக் குல்லாய், இவைகளுக்குப் பதில் பைஜாமாக்களும், டைகளும், சிகரெட்டுகளும், ஸ்கார்புகளும் மட்டுமே அந்த சூட்கேஸில் இருந்தன.

நடந்தது இவ்வளவுதான். சுப்புசாமி அய்யர் அவசரத்தில் ஏதோ ஒரு நவ நாகரிக வாலிபனின் சூட்கேஸைக் கொண்டு வந்து விட்டார். வாலிபன் அய்யரவர்களின் சூட்கேஸைக் கொண்டுபோ யிருக்க வேண்டும்.

போனல் போகிறது, என்று நினைத்தார் சுப்புசாமி அய்யர். ஆனல் இந்த வாலிபன் உண்மையைக் கண்டு பிடித்துத் தன்னைக் கேலி செய்தால் என்ன உத்திரம் கொடுப்பது? தன் வேஷ்டியும் சட்டையும் அவ்வளவு நாசுக்கானதல்ல; இருந்தாலும், அவைகளைப்பற்றி வெட்கப்பட வேண்டியதில்லை. ஆனல் எப்படி அக் குரங்குக் குல்லாய் தன்னுடையதென்று ஒப்புக்கொள்ளுவது? இது வரை இரகசியமாக இரவு மட்டும் அக் குரங்குக் குல்லாயை அணிந்து வந்தவர். ஆனல் இப்போது அவ்வாலிபனுக்குத் தன் குட்டு வெளிப்பட்டுப் போய்விட்டது.

சுப்புசாமி அய்யர் மனம் மேலும் மேலும் கலக்க மடைந்தது. "என்ன ஸார், தாங்கள் மங்கி காப் (Monkey Cap) போட்டுக்கொள்வது வழக்கமோ?" என்று அவ்வாலிபன் கேட்கப்போவது நிச்சயம். என்ன பதில் சொல்லுவது?

"என்னுடையது இல்லே, என் வேலேக்காரன் முனியனுடையது" என்று ஏன் பதிலளிக்கக்கூடாது! வாலிபன் சும்மா விடுவான? "உம்முடைய வேலேக்காரன் மங்கி காப் உங்கள் சூட்கேஸில் கிடப்பதின் மர்மமென்ன சார்?" ஆந்தைபோல் விழிக்க வேண்டியதுதான்!

சுப்புசாமி அய்யர் சட்டென்று எழுந்து உட்கார்ந்தார். இதுவும் கஷ்டகாலந்தான். இவ்வலேயிலிருந்து எப்படித் தப்புவதென்று தெரியவில்லே. ஒருவேளே தான் தன் வேலேக்காரனைக் கொன்றுவிட்டதாக அவ்வாலிபன் எண்ணுவானே என்ற பலத்த சந்தேகமும் வந்தது. உடம்பு நடுங்க ஆரம்பித்தது. எப்படி இந்த விபத்திலிருந்து தப்புவதென்று சுப்புசாமி அய்யருக்குத் தெரியவில்லே.

நடுநிசி ஆகிவிட்டது. சந்தடி செய்யாமல் அவ்வாலிபனின் சூட்கேஸை எடுத்துக்கொண்டு சுப்புசாமி அய்யர் வெளிக்

(133-ம் பக்கம் பார்க்க)

# சிந்தனை

[ஆர். பங்கஜம், ஸ்ரீரங்கம்.]

ஒவ்வொரு வேளையும் அவர் வரும் போதுகூட வருகிறது, தின்கிறது, போய் விடுகிறதே. இப்படி இரண்டு மாதமாச்சு இன்று. பெண்டாட்டி பிள்ளை; இதுதான் மனுஷன். அந்தரங்க உண்மையாய் கொடுத்து வைத்து 'பகவான்' அளிக்கும் சொத்து. அது இருந்தும் அனுபவிக்கும் பாக்யம் அவனுக்கு இல்லை. ஏன்?

இளமையின் சுகம், ஏக சொத்தின் ஆனந்தம், இருநூறு ரூபாய் இரண்டாந் தேதி கிண், கிண், என்று கையில் சேர்ந்து விடும். இந்தப் பணங்களை எப்படிச் செலவழிப்பது? மார்க்கமா இல்லை?

அவனுக்கு காட்டிலாகாவில் வேலை. அடிக்கடி வெள்ளையருடைய ஸ்நேகம். அவர்களுடன் வரும் அந்த அரை 'உடை' யுடைய அணங்குகளைக் கண்டால்........ அவன் மனம் விம்மிஎழுகிறது......அவர்களையும் பார்த்து, ஆனந்தமாய் வீடு சேர்ந்தால் பதினெட்டு 'முழப்'புடவையும், த்ரேகம் தெரியாமல், நகையும், காசளவு குங்குமப் பொட்டும், குதிபோங்கும் நடையும், எப்படிப் பிடிக்கும்!......ஐயே 'ஒக்காளம்' கூடவரும் சாப்பிடும்போது............... ப்ராந்தியின் வேகம்.

அவளும் பணக்காரன் வீட்டுப் பெண் தான்.........பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். முடிவில்லை....வந்த வேளையில் போடுவாள் சோறு. 'ஏன்' என்று கேட்பதே இல்லை. ஊரில்மட்டும் சொன்னா....'நீ தேவடியாள் ஆனால் நான் நட்டுவன்'......என முடிந்துவிட்டது என்று. காசு, பணம் ஒழிந்தது; 'திருட்டுக் கையெழுத்தால்......பணம் பெற்றுக்கொண்டு விட்டான். குற்றத்தால் வேலை போயிற்று...... அது அவள் செய்த புண்யம். அன்று வந்த துரை, நல்லவன்......இல்லாவிட்டால் சிறை வாசம் எத்தனைநாளோ........

இரவிலேயே ஊரைவிட்டு ஓடிவந்தான். எங்கள் வீடு தேடித்தான் உறவைச் சொல்லிக்கொண்டு. 'என்' மாமனாரின் பந்துவாம் அவன்.

அடே யப்பா. ஏதுடா! நீ வந்தே... நீ வரப்பட்டவனா? உபசாரத்துடன் இரண்டு நாள். பிறகு சாதாரணமாக...... பின் குறைந்தது உற்சாகம். 'ஊருக்குப் போகவில்லையா?': என் மாமனார் கேட்டார். போக ணும்.........இதுதான் பதில்...... அதிகமாய் லக்ஷ்யமே செய்யவில்லை நாங்கள். அப்புறமென்ன? சாப்பாடு போட்டோம்.

இன்னும்தான் போடுகிறேனே. வந்த வருஷத்திற்குள் எத்தனையோ சம்பவங்கள்.........மாமனாரும் போய் விட்டார். நாங்களும் சம்சாரிகள்தான். ஆனால் அவன் வீட்டை விட்டு அசையவேயில்லை. ஏன் என்று கேட்பதுமில்லை.

மூன்றாவது மாதம் முதல் தான் ஜுரம் ஆரம்பம். சாதாரணம் என நினைத்தோம். ஆனால் அது விபரீதமாம்; ஒரு கட்டி. அதுதான் இளமையின் சுக பொக்கிஷம்.

ஐந்தாறு டாக்டர்கள் பார்த்தார்கள்... போனார்கள். வண்டிச் செலவுதான். சொன்னது என்ன? ரொம்ப சீரியஸ் கேஸ்... நாளாகும்...குணமா...க. ஒரு வேளை...நிச்சயம் சொல்ல முடியாது.

அர்த்தம் புரிந்தது. அது வரை அவர் பிள்ளை, பெண்டாட்டி, என்று கேட்கவேயில்லை. அன்றுதான் தொல்லை விட்டது அழைத்துப் போய் விடுவான் என்று. ஆபத்து; அதிலும் அப்பாதானே. அவன் பிள்ளைக்குத் தந்தியடித்தோம்.

அவனும் அடித்த தந்திக்கு உடனே வந்து சேர்ந்தான். ஆனால் நாங்கள் நினைத்தபடியில்லை. அவன் அம்மா சொன்னாளாம்! போய்விட்டால் என் கணவர் உதவியுடன்

இழுத்து எறிந்துவிடுவதாம்! "இல்லா விட்டால் இரு நன்றாய் குணமாகும் வரை; கூட்டிவராதே."

எப்படியிருக்கு தலைவிதி! இரண்டு மாசமாய் அவனுக்கும் டிபன், சாப்பாடு, ஏக தடபுடல் வீடு. என்ன காருண்யம் வேண்டியிருக்கு...என்று எல்லோரிடமும் பேச்சு. இந்த நிலையில்...அவருக்குக் கோபம் வேறே வந்து விடும். ஆகாரத்தை எறிவார்; மருந்தைக் கொட்டி விடுவார்... கட்டிய பெண்டாட்டிதான்—கை கட்டி நிற்பது போல்...

ஒரு தினம் என் கணவர் சொன்னார்: "உன் பாடு ரொம்ப ஜோர், என் பாட்டை விட..." அவனுக்கு உறைத்திருக்கும்."

இப்பொழுது செத்த நாய் போல் வீதியில் அல்லது கடைத் தெருவில் உட்கார்ந்து கொண்டிருப்பான். அவர் வரும் போது உடன் வருவான். மூச்சு, முனகல், எல்லாவற்றையும் கட்டி வைத்து விட்டு சாத்வீக, விசுவாசத்துடன் சாப்பிட்டு விட்டுப் போகிறான்.

நான் நினைக்கிறேன்...செல்லும் வரை சிங்காரம், அதற்கு வழியில்லா விட்டால் ஆங்காரம். யாரிடம் முடியும்? எண்சாண் உடம்பையும் குறுக்கிச் சொண்டு ஒருவர் ஆதரவில் அவர்களை எதிர் பார்த்துக் கொண்டு நிற்பது மட்டும் லேசான காரியமா? அதைவிடச் சித்திரவதை வேறு வேண்டுமா என்ன, மனதிற்கு?

இத்தனை அனுபவத்திலும் எனக்குத் தோன்றுவது, 'வேளா வேளைக்குக் கொட்டிக்கவரான்'... என்கிறார்களே எல்லோரும், அப்படியில்லை. இரண்டு காசு வந்தால் இப்படி ஒரு 'ஆத்மா' என்னதான் 'லஜ்ஜை' யற்றவனானாலும் இருப்பானா! மானம், குலம், கல்வி, எல்லாம், பசி வந்த போது பறக்கத்தான் செய்கிறது.

ஆனால்...கட்டிய மனைவி, கிராதகனானாலும் கணவன் எனத்தானே நினைக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. அனுபவித்தால் தெரியும் அதன் சுகம். சொல்லுவார்கள் தான்......அதுவா பேச்சு? அப்ப எல்லாம் அப்படி இருந்தானே......அவனையும் வைத்துக்கொண்டு இப்போ அவள் ......இந்த வார்த்தைக்கு எத்தனை மகிமை ......இதைக் கொஞ்சம் யோசிக்கலாம் ......பணம் அவனிடம் இல்லாவிட்டால் ......அதற்காக நிராகரிப்பதா?

பணத்தை வைத்துக்கொண்டு, பர்த்தாவைத் தவிக்கவிடுவது, பாவமல்லவா? பாவத்தைக் கண்டது யார்?" என்ற கேள்வி பிறக்கும்.

சுத்துகிற காலத்தில் சுத்திவிட்டு, சாகும் காலத்தில் சள்ளைவந்தது. இதற்கும், அவர் பயப்படலாம். இந்த என் வீடே அதைவிடத் தேவலையோ என்னவோ? யார் கண்டார்கள் உள்புகுந்து?—என் கணவரும் ஊதாரி. பரநாரி ப்ரியர் இல்லை. இருந்தாலும், பிற்கால வாழ்க்கைக்குப் பின் தொடர்ந்து நிற்கும் அவரையே உதாரணமாக எடுத்துச் சொல்லும் நான், இதைவிட இன்னும் எண்ணிறந்த பேர், அவ்விதமேயாக, விதியைத் தேடுகிறார்களே......அவர்களை என் செய்வது...... அவர்களை அடைந்த பெண்மணிகள்......?

---

(131-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளம்பினார். ஒரு பர்லாங்கு தூரத்திலிருக்கும் நீர் வீழ்ச்சியை நெருங்கினார். நல்ல வேளை, அங்கு ஒருவருமில்லை. சூட்கேஸை தண்ணீரில் எறிந்துவிட்டு, அது மறைவதைப் பார்த்துவிட்டு, மன நிம்மதியுடன் தன் ஹோட்டலுக்குத் திரும்பினார்.

"வரட்டும், வரட்டும்; 'அப்பா, அந்த சூட்கேஸ் என்னுடையதில்லை அப்பா. நான் ஒரு சூட்கேஸும் கொண்டுவரவில்லை. மங்கிகாப்பு மாச்சு, டாங்கி காப்பு மாச்சு; இவைகளை நான் ஆயுசில் பார்த்ததே கிடையாது'—இப்படிச் சொல்லிவிடுகிறேன்," என்று நிச்சயித்துக் கொண்டு சீக்கிரத்தில் மோட்டார் சத்தம் போல் கொறட்டையுடன் சுப்புசாமி அய்யர் தூங்கலானார்.

# மனம்போல மாங்கல்லியம்

[பத்மினி சிந்தாமணி, மைலாப்பூர்]

"மாதவா, ஏன் இன்னும் காலேஜுக்குப் புறப்படவில்லை," என்றார், கிருஷ்ணய்யர்.

"அப்பா இன்றைக்கு "ஸ்பெஷல்" க்ளாஸ்; ஆகையால் நேரம் கழித்துப் போகலாம்," என்றான் மாதவன்.

"சரி அப்படியானால் நான் ஆபீஸ்போய் உனக்குக் கார் அனுப்பலாமோல்லியோ?" என்றார் கிருஷ்ணய்யர். கிருஷ்ணய்யர் சர்க்கார் உத்தியோகஸ்தர். அவருக்கு மாதவ் ஒரேபிள்ளைதான். பெண்கள் கிடையாது அவருக்கு அவன்மேல் பிரியம் அதிகம். சகஜம்தானே? அவன் தாயார் கல்யாணி அம்மாளுக்கும் அப்படிதான். மாதவுக்குப் பத்து வயது வரையில் பாவாடை கட்டி, தலை பின்னி மூக்கு குத்தி எல்லா விதமான அலங்காரங்களும் செய்து பார்த்து மகிழ்ந்து வந்தார்கள். அவன் வீட்டில் இரண்டு நிமிஷம் இல்லாவிடில் வீடு அல்லோல கல்லோலப்படும். நவராத்திரி அவள் பாடு குஷி, மாதவன் பாடு திண்டாட்டம். மாதவுக்கு இதெல்லாம் பிடிக்காது. இருந்தாலும் அம்மா, அப்பாவின் மேலுள்ள ஆசையாலும், பெண் இல்லாத வீடானதாலும் சகித்து வந்தான்.

இப்பொழுது மாதவுக்கு 22 வயது. பி. ஏ. (ஆனர்ஸ்) படித்துக்கொண்டு இருந்தான். பையன் புத்திசாலி.

கார் வந்ததும் மாதவ் காலேஜுக்குப் புறப்பட்டான். அவன் "இந்த" காலேஜில் படித்து வந்தான். அவனுடன் சுமித்திரா என்னும் பெண்ணும் அதே காலேஜில் இன்டர் மீடியட் கிளாஸில் படித்து வந்தாள். மாதவன் அவளைக் கண்ட நாள் முதல் காதலித்து வந்தான். அவளும் அவனைக் காதலித்து வந்தாள். ஆனால் இவர்களுக்கு தம் தம் காதலை வெளியிட சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. ஆதலால் அது மௌனக் காதலாகவே இருந்து வந்தது.

சுமித்திரா சுவாமிநாதய்யருடைய பெண். இவரும் சர்க்கார் உத்தியோகஸ்தர். கிருஷ்ணய்யரும், சுவாமிநாதய்யரும் ஆப்த நண்பர்கள்.

கலியாணி அம்மாள் தன் புதல்வனுக்குக் காலா காலத்தில் கலியாணம் பண்ணி மாட்டுப் பெண் வரவேண்டுமென்று அதிக ஆவலாய் எதிர் பார்த்து வந்தாள். ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணய்யரும், கலியாணி அம்மாளும் போஜனம் அருந்திவிட்டு தாம்பூலம் தரித்துக்கொண்டு இருந்தார்கள். மாதவன் தன் ரூமில் ஏதோ சிந்தித்துக் கொண்டு இருந்தான். அப்பொழுது கல்யாணி கிருஷ்ணய்யரைப் பார்த்து:

"என்ன உங்களுக்கு மாதவனின் கலியாணத்தைப்பற்றி கவலையே இல்லைபோல் இருக்கிறதே?" என்றாள்.

"இதற்குள் என்ன அவசரம். அவன் என்ன பெண்ணா? இந்த காலத்தில் பெண்களுக்குக்கூட இவ்வளவு அவசரப் படுகிறதில்லை. இந்த வருடம் அவன் பரீக்ஷை ஆனவுடன் பார்த்தால் போகிறது," என்றார் கிருஷ்ணய்யர்.

கல்யாணியின் கண்களில் நீர்ததும்ப, "எனக்கோ ஒரு குழந்தை; நான் இன்னும் எத்தனை நாள் இருப்பேனோ? இன்றைக்கு இருப்பவர்கள் நாளைக்கு இருப்பதில்லை. எனக்கோ வெற்றிலை போட்டுக் கொண்டால் மார் அடைக்கிறது. நானே இவ்வளவு பலஹீனமாய் விட்டேன்," என்று மேலும் விம்ம ஆரம்பித்தாள்.

"ஐயையோ! அழாதேடி. சரி, வச்சாச்சா ஒப்பாரி. எனக்கு எப்பவும் இந்த நீலித்தனம் பிடிக்கிறதில்லை. நான் என்ன சொல்லிவிட்டேன், நீ அழும்படியாய்? இருந்தாலும் பெண்தானே. படிப்பு உண்டா, ஏதாவது நாகரீகம் உண்டா? சரி நான் சொல்வதைக் கேள். இது கலிகாலம். இப்பொழுது எல்லாம் காதல் கல்யாணம்

அல்லவோ பேஷன். இருந்தாலும் நாட்டுப்புற புத்தி எங்கே போகும்?"

"சரி, சரி, போரும் உங்கள் தத்துவம் வேதாந்தம், பேஷன் எல்லாம். என்ன, எல்லாம் கரைகண்டுட்டீங்களோல்லியோ? என்ன பிரயோஜனம் உங்களைச் சொல்லி செவுத்துக்கிட்டயான முட்டிக்கலாம்," என்றாள் கலியாணி அம்மாள்.

இதற்குள் மாதவன் வர, பேச்சும் நின்றது.

"அம்மா, என்ன கண்ணைத் துடைக்கிறாய். அழறையா?" என்றான் மாதவன்.

"இல்லையடா. உங்கப்பா நான் எது சொன்னாலும் காது கொடுத்து கேட்க மாட்டேன் என்கிறார்" என்றாள் கல்யாணி அம்மாள்.

"அம்மா, எதுவானாலும் என்னால் ஆகக்கூடிய காரியமானால் நான் செய்யத்தயார்" என்றான், வெகு குதூகலத்துடன் ஒன்றும் அறியாதவனாய்.

"வா, காப்பி சாப்பிட்டுவிட்டு சாவகாசமாய் சொல்லுகிறேன்." என்றாள்.

எல்லோரும் எழுந்து காப்பி சாப்பிடப் போனார்கள். 'தன் பிள்ளையிடம் எப்படி சொன்னால் சரியாக இருக்கும்' என்று யோசனை செய்தாள்.

திங்கட்கிழமை மாதவன் தலைவலி என்று காலேஜ் 'அடெண்ட்' பண்ணாமல் வந்துவிட்டான். வரும்பொழுதே, "அம்மா எனக்கு ரொம்பவும் தலைவலிக்கிறது. சீனுவை ஒரு டம்ளர் காப்பி போடச் சொல்கிறாயா"? என்றான்.

அவன் தாய் அவனுக்குப் படுக்கை போட்டு அவனைப் படுக்கச் செய்துவிட்டு அவன் தலைமாட்டில் உட்கார்ந்துகொண்டாள். சீனு காபி கொண்டுவந்து கொடுத்தான். காபி குடித்துவிட்டு படுத்துக்கொண்டான் மாதவன்.

"அப்பா, மாதவா, ஏண்டாப்பா தலைவலி?" என்று கேட்டுக்கொண்டே, அவன் தலையை தடவிக் கொடுத்துக் கொண்டே இருந்தாள்.

"அம்மா இன்றைக்கு வெயில் அதிகம் இல்லையா? எனக்குப் பொறுக்க முடியவில்லை," என்றான் மாதவன்.

"ரொம்ப அலட்டிக்கொள்ளாதே" என்று சொல்லிவிட்டு, "மாதவா நீ கல்யாணம் பண்ணிக்கொண்டு எனக்கு இன்பமளிக்க மாட்டாயா. நம்ப வீட்டில் பெண் கிடையாது. மாட்டுப்பெண் வந்தால் எவ்வளவு அழகாய் இருக்கும்," என்றாள், கல்யாணி அம்மாள். அவனுக்கு பகீர் என்றது. "ஆஹா சுமித்திராவைப்பற்றி என்ன ஆவது? இருந்தாலும் நானே அவளோடு நேரில் பேசவில்லை. எனக்கோ அவள் நடை, உடைபாவனைகளைக் கண்டு அவள்மேல் ஆசை விழுந்துவிட்டது. என்ன செய்வேன். என்ன பதில் சொல்வேன் அம்மாவுக்கு?" என்று ஒன்றும் புரியாமல் வருத்தப்பட்டான்.

"என்னடாப்பா யோசனை செய்கிறாய். நான் என்னகேட்டேன் ஞாபகம் இருக்கிறதா?" என்றாள்.

"அம்மா! அப்பா என்ன சொன்னார்" என்றான் மாதவன்.

"உங்கப்பா உன்னை கேட்கச்சொன்னார். உன் சம்மதம் இருந்தால் மேலே பார்ப்போம்" என்றாள்.

"இன்னும் கொஞ்சம் நாள் போகக் கூடாதா" என்றான் மாதவன்.

உடனே அவன் தாயாருக்கு மூஞ்சி சுறுங்கிவிட்டது. 'பிள்ளையும் தகப்பனாரும் ஒரே மாதிரி சொல்லுகிறார்களே' என்று திகைத்தாள்.

மாதவன் தன்னை அறியாமல் உறங்கிவிட்டான்.

அவள் வருத்தத்துடன் எழுந்திருக்க, கிருஷ்ணய்யரும் மாலை ஆபீஸிலிருந்து வந்தார். வந்ததும் வராததுமாய் "கல்யாணி உன் பிள்ளைக்கு பேஷான வரன் ஒன்று வந்து இருக்கிறது," என்றார் சந்தோஷத்துடன்.

"என்ன, என்ன எனக்கு நல்லகாலம் பிறந்து விட்டதா. நான் கேட்பது கனவா, நினைவா? மாதவனை இன்று கேட்டதில் அவனும் நிராகரித்து விட்டான். ஏதோ தெய்வம் என் பங்கில் இல்லை என்று நினைத்தேன்" என்றாள் ஆனந்த பாஷ்பத்துடன்.

"சுவாமிநாதய்யருடைய பெண். என்னுடைய பால்ய சிநேகிதர். ஏதோ வாத்தி

யாரின் மூலம் நம் பையனின் தகவல் கிடைத்தது என்றும் நாளைக்கு வாத்தியார் வந்து ஜாதகம் கேட்பார் என்றும் இன்று மாலை ஆபீஸில் சொன்னார்," என்றார்.

"சரி மிகவும் சந்தோஷம். பெண்ணுக்கு என்ன வயது, என்ன படிக்கிறாள், எல்லாம் தகவலாய் சொல்லக் கூடாதா?" என்றாள் மிகவும் ஆவலுடன்.

"என்ன அவசரம், என்ன ஆனந்தம், பொறுக்கக் கூடாதா? இவ்வளவு தூரம் சொன்னவன் அதையும் சொல்ல மாட்டானா. பெண் ஜுனியர் இன்டர் மீடியட், பெயர் சுமித்திரா, வெகு அழகாய் இருப்பாளாம். வாத்தியார் வந்ததும் நாம் பார்க்கப் போய் வரலாம்," என்றார்.

"பையனிடம் சொல்ல வேண்டாமா. அவனிஷ்டத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாமா. தெய்வமே, அவன் பங்கில் இருந்து இதை பூர்த்தி செய்ய மாட்டாயா?" என மிகவும் அங்கலாய்த்தாள்.

'மாதவன் இன்றைக்கு காலேஜில் இருந்து சீக்கிரம் வந்து விட்டான். தலை வலி என்று படுத்துக் கொண்டு இருக்கிறான்" என்றாள்.

கிருஷ்ணய்யர் மாதவனின் அறைக்குப் போய் "மாதவா எப்படி இருக்கிறது உன் தலைவலி," என்றார்.

"இப்பொழுது வலிக்கவில்லை அப்பா. நானே எழுந்திருக்க வேண்டும் என்று நினைத்தேன். நீங்களும் வந்தீர்கள்," என்றான் மாதவன்.

தாயும் அங்கு வந்தாள். கிருஷ்ணய்யர் மாதவனைப் பார்த்து "அப்பா இந்த வருஷம் உனக்கு கல்யாணம் பண்ணிவிட வேண்டும் என்று நாங்கள் ப்ரயத்தனப் படுகிறோம். தெய்வ சங்கல்பமாய் இன்றைக்கு ஒருவரன் வந்து இருக்கிறது. நீ இதைத் தட்டாமல் பண்ணிக் கொள்ள வேண்டும்," என்றார்.

மாதவன் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் முஞ்சியில் அசடும் வருத்தமும் வழிய "சரி" என்றான் தீனக் குரலில்.

தாயும், தகப்பனும் மேல் யத்தனங்கள் செய்து கொண்டு இருந்தார்கள். பெண்ணைப் பார்த்தாய் விட்டது. மனதுக்குப் பிடித்து விட்டது. பிள்ளையை வெள்ளிக் கிழமை பெண்ணைப் பார்க்க அழைத்துக் கொண்டு போகப் போகிறார்கள். இதற்குள் மாதவனுக்கு இருப்புக் கொள்ள வில்லை. அவனுக்கு சுவாமிநாதய்யர் பெண் சுமித்திரா என்று தெரியாது. அவளுக்கும் இவன் கிருஷ்ணய்யர் குமாரன் என்று தெரியாது. இவர்கள் பார்த்தது காலேஜிக்குப் போகும் வழியில் தான். இவர்கள் என்ன அறிவார்கள்?

மாதவனுக்கு என்ன எண்ணமெல்லாமோ தோன்றிற்று. "சுமித்ரா இல்லாத வாழ்வு என்ன வாழ்வு. நமக்கு வேறு கதி இல்லையா? எந்த விதமாய் தன் மனதில் உள்ளதை அவளிடம் அறிவிப்பது?" என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் கொண்டு இருந்தான்.

வெள்ளிக் கிழமையும் வந்தது. மாதவன் பாடும் திண்டாட்ட மாயிற்று. "என்ன தந்தை, என்ன தாய்! இவர்கள் இருக்கும் வரை இந்தத் தொல்லைதான். நம் மனதுக்கு இசைந்தவளை நாம் கல்யாணம் செய்துக் கொள்ள முடிய வில்லை, பார்த்தாயா" என்று அழ மாட்டாத துக்கமாய்த் தன் மனதில் சொல்லிக் கொண்டான். இருந்தாலும் மாலை 5 மணிக்கு நல்ல ஸில்க் ஷர்டும், ட்வீட் கோட்டும், சூட்டும் போட்டுக் கொண்டு கிளம்பினான், தந்தை தாயுடன், காரில்.

சுவாமிநாதய்யருடைய வீட்டில் கார் நின்றது. எல்லோரும் இறங்கினார்கள். கல்யாணி வெற்றிலை, பாக்கு, பழம், ரவிக்கைத் துண்டு இதை யெல்லாம் பெண்ணிடம் கொடுத்தாள். சுமித்ரா அதை வாங்கிக் கொண்டு டாம்பீகமாய் இல்லாமல் அவளைச் சேவித்தாள். கொஞ்ச நேரம் கழித்து சுவாமிநாதய்யர் "சுமித்ரா! இங்கு வாம்மா. உன்னை பார்க்க வந்து இருக்கிறார்கள்," என்றார்.

அவளும் சங்கோசப்பட்டுக் கொண்டே போனாள். என்ன இருந்தாலும் கல்யாணம் என்றால் சங்கோசப்படுவது சகஜம் தானே! மாதவனுக்கு இருப்புக்கொள்ள

(139-ம் பக்கம் பார்க்க)

# தக்ஷிண திலகம்

[வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி, பெரம்பூர்]

இங்கிலாந்தில் நடைபெற்ற வேல்பி கமிஷன் முன் சாக்ஷியங் கூறச் சென்னை மாகாணப் பிரதிநிதியாக ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார். பம்பாய் மாகாணப் பிரதிநிதியாக ஸ்ரீ கோபால கிருஷ்ணகோகலே தெரிந்தெடுக்கப்பட்டார்.

கடல் கடந்து அந்நியநாடு செல்பவரை ஜாதிப்ரஷ்டம் செய்வதென்கிற கொள்கை பிராமணர்களுக்குள் கடக்க முடியாத பெரிய இடையூறாயிருந்தது. ஐயர் அவர்கள் தீவிரமான ஆசார சீர்திருத்தப் பற்றுடையவராதலால், அந்த இடையூறைத் தைரியமாய்க் கடந்து இங்கிலாந்து சென்று தமது கடமையைச் செய்தார். அங்கே அச்சமயம் வந்து கூடியிருந்த சுரேந்திரநாத் பானர்ஜி, கோபால கிருஷ்ண கோகலே முதலியவர்களுடன் கலந்து பேசி நாட்டுக்குரிய நன்மைகளை நாடலானார்; இந்திய தேசிய மகாநாட்டின் கொள்கைகளைப்பற்றிப் பல உபந்யாஸங்கள் செய்து ஆங்கிலப் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார். அவர்களிற் பெரும்பான்மையரின் ஆதரவு பெற்று, இலங்கைக்குத் தூது சென்று திரும்பிய மாருதி போல் வெற்றியுடன் திரும்பித் தம் நாட்டின் பொதுஜன சமூகத் தலைவராக விளங்கினார்.

இவ்வாறிருக்கையில், 1908-ம் ஆண்டின் பிற்பகுதியில், பத்திரிகையில் ராஜாங்க விரோதமாக எழுதினாரென்கிற குற்றம் ஐயரவர்களின் மேல் அரசாங்கத்தாரால் கொண்டுவரப்பட்டுக் குற்றாலத்திற் கைது செய்யப்பட்டார். அங்கிருந்து சென்னைக்குப் போலீஸ் பாராவுடன் கொண்டு வரப்பட்டு—உடனே சிறைச்சாலைக்கனுப்பப்பட்டார். சிறைச்சாலையில் ஒரு வாரமிருக்க நேர்ந்தது. அப்பால், இங்கு வந்திருந்து இங்கிலாந்து சென்ற சில ஆங்கில நண்பர்களுடைய நல்லபிப்பிராயமும் இவ்விடத்துப் பெரியாருடைய நல்லபிப்பிராயமும் துணை செய்தபடியால் வழக்கு விபரீதமாகாமல் சமாதானமாய் முடிந்தது.

ஐயர் அவர்கள், தாம் வாயால் சொல்லியதையோ பத்திரிகையில் எழுதியதையோ தம் அநுஷ்டானத்தில் காட்டாமலிருக்கமாட்டார். எத்தகைய இடையூறுகள் நேர்ந்தாலும் தைர்யமாய் அவைகளை எதிர்த்து நின்று தம் முயற்சியைச் செய்து முடித்துக் கலங்கா நிலை கொண்ட அலங்கார தீபமென விளங்குவார்.

இந்த வழக்கம் ஐயரவர்களைக் கடைசி வரையில் தொடர்ந்து நின்றமையால், தாம் பிறந்த ப்ரஹசரண பிராமண வகுப்பிற்கு—என்றும் பொன்றாப் புகழை நாட்டியவரானார்.

ஐயரவர்கள் ஆசார சீர்திருத்தத்தின் சார்பாய்ச் செய்த துணிகரமான செய்கைகள் பலவுண்டு; அவைகளில் அவர் வைதவ்யமடைந்த தம்முடைய தலைமகளுக்கு மறுமணஞ் செய்வித்த வீரச் செய்கையொன்று. இது தமிழுலகுள்ளவரையில் மறையாமல் விளங்கக்கூடியதாயிற்று. இந்த அரிய செய்கையால் ஐயரவர்கள் தமது பந்து ஜனங்களிடத்திலும் பிராமண வைதிகர்களிடமும் பட்டபாடு கொஞ்சமல்ல. இதனால் ஜாதிப்ரஷ்டம் செய்யப்பட்டாராயினும் ஐயர், அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண் சிங்கமென நின்று, பத்திரிகையின் மூலமாகவும் பிரசங்க மூலமாகவும் கர்ஜனை செய்து இடையூறுகளை, முருகன் மலை பிளந்ததெனப் பிளந்தொழித்தார். ஆனால் தம்மிடம் வந்து விதவா விவாகத்தைப் பற்றிப் பேசும் பிராமணர்களை நோக்கி, "நாடு இன்னும் உயரிய பொதுநலப் பான்மை பெறவில்லை. ஆதலால் இப்போது நீங்கள் இதில் இறங்கினால் சமாளிப்பதரிது. உலக முழுவதும் கலங்கினாலும் கலங்கா நிலையில் நிற்கக்கூடிய என்னையே வைதிக உலகம் பலவழிகளில் கஷ்டத்துக்குள்ளாக்கி விட்டது. பொருளும் ஆற்றலும் அஞ்சா நெஞ்சமும் இடைவிடா உழைப்பும் கொண்டவர் துணிந்து இறங்கக்கூடிய ஆசாரச் சீர்திருத்தமாகுமிது—" என்று கூறுவார்?

பொது நல உழைப்பென்னும் கவசம் பூண்டு பொன்றாப் புகழுடன் 1856-ம் ஆண்டில் சோழநாடு புண்ணியம் பெற, அவதரித்த ஐயர்-தேச பக்தியில் ஈடுபட்டுழைக்கும் வழியைத் தமிழுலகுக் குணர்த்திய புண்ணியம் தம்மைத் தொடர்ந்து வர, 1916-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 18-ந் தேதி மாலை ஐந்து மணிக்கு இறைவன் திருவடி நிழலை யடைச்

னார். இந்தச் செய்தி கேட்ட பாரதகண்டம் கலங்கியது! கண்ணீர் விட்டது! பத்திரிகைகள் மூலமாகவும் பிரசங்க மூலமாகவும் அநுதாபங் காட்டியது! ஐயரவர்களுடைய அரிய செயல்களைக் கூறி ஆரவாரித்தது! ஐயரவர்களின் ஆத்மா சாந்தியடையுமாறு எல்லாம் வல்ல இறைவனைத் துதித்தது! ஆகா! இவைகளை யன்றி வேறென் செய்ய வல்ல திவ்வுலகம்!

ஐயரவர்களுக்கு—இக் காலத்தில் இரண்டு பெண்களும் ஒரு புதல்வனும் எஞ்சி நின்றமையால், அபரக்கிரியைகள் செவ்வையாய் நடைபெற்றன. குடும்பம் எவ்விதமான குறைகூறவும் இடமில்லாமல் திருமகள் விலாசம் பரிபூர்ண மாயமைந்திலகியது.

புதல்வர் ஸ்ரீ. விசுவநாதஐயர் என்பவர் ஐயரவர்களுடைய அந்தியகாலத்துக்கு முன்பே பி. ஏ. பாஸ் செய்துவிட்டு—"சுதேசமித்ரன்" காரியலாயத்தைக் கவனிக்கும் பொறுப்பை வகிக்கலாயினர். இது ஐயரவர்களுக்குப் பரம திருப்தியை அளித்தது. ஆனால் ஐயரவர்களைப்போல்—தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டுழைத்துப் புண்ணியம் பெறுவதில்—ஸ்ரீ. விசுவநாத ஐயரவர்களுக்கு நேரியவழி யேற்படவில்லை. இது ஐயரவர்களிடமிருந்து பழகிய எம்போன்றவர்களுக் கெல்லாம்—ஆகா! புலிக்குப் பிறந்தது......என்ற பழமொழியை நினைத்து வருத்தமுற நாளைக்கும் இடமாயிருக்கிறது! என்ன செய்யலாம்? பூர்வ புண்ணியம் அவ்வளவுதான்!

நம் நாட்டுக் குழைத்த அந்நிய நாட்டுப் பெண்பாலராகிய மிஸஸ் அநிபெஸண்ட் அம்மை, தாம் செய்த ஒரு பிரசங்கத்தில் மாணவர்களைப்பற்றிப் பேசுகையில்—"உபாத்தியாயர்கள் தம்மிடம் கல்வி கற்கவரும் மாணவர்களை வெறும் அசேதனர்களாக நினைப்பது கூடாது. அவர்களெல்லாம் பூர்வ ஜன்மங்களிலே பல அநுபவங்களடைந்து இப்போது தாங்கள் பிறந்துவந்த பிராகிருத ஜன்மத்திலும் புதிய அநுபவங்களடைய வந்திருக்கும் சேதன வஸ்துக்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்—" என்று கூறியுள்ளார். இதனால் பூர்வ ஜன்ம வாசனைக்குத் தக்கபடி மக்கள் இப்பிறப்பில் பயனை அடைவர்—என்பது ஒரு வழியிற் புலனாவது காண்க!

நம் பெரியோரும் நம் சாஸ்திரங்களும் பூர்வ ஜன்ம வாசனையைப்பற்றிக் கூறியிருப்பது பலவிருக்க, அநிபெஸண்டின் வாக்கை யெடுத்துக் காட்டிய தேனெனில், தற்கால நாகரிகர்க்கு, ஸ்ரீ கிருஷ்ணபகவான் திருவாய் மலர்ந்தருளிய பகவத்கீதை, "அநிபெஸண்ட் பகவத்கீதை" என்று பெயர் தாங்கிய வளவில் சுவை தருவதாய் விளங்கியது பற்றியே யாம்!

ஐயரவர்களுக்கு அநிபெஸண்ட் அம்மையினிடம் பெரிய மதிப்புண்டு. ஐயரவர்கள்,

"இந்தியா இனிச் சமீபகாலத்தில் உன்னத நிலைமைக்கு வந்து உலகத்தாருக்குப் பூர்வம் எப்படி பாரமார்த்திக ரகஸ்யங்களைக் கற்பித்ததோ, அப்படி இனியும் கற்பிக்கும் என்று நம்புவோரில் அநிபெஸண்ட் ஒருவர்—" என்று அந்த அம்மையாரைப் பற்றிப் பேசியதுண்டு.

"நம் பூர்விக ஸநாதன தர்மமாகிய ஆர்ய வைதிக மதத்தில் குறைந்து கொண்டுவந்த பக்தியைத் தூண்டி வளர்க்கும் விஷயமாயும் நல்லொழுக்கம், தேசாபிமானம், ஜாதியக் கல்வி இவைகளின் அபிவிர்த்தி விஷயமாயும் மிஸஸ் அநிபெஸண்ட் செய்துவரும் முயற்சி போற்றத் தக்கதாகும்—" என்று அவ்வம்மையை வியந்திருக்கிறார் ஐயர்.


**நீங்கள் வாசிக்க!**

திரு. வி. கலியாணசுந்தரனார் இயற்றிய நூல்கள்

| | | |
|---|---|---|
| பெரிய புராணம்—அரும்பத ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும் | 7 | 0 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் | 2 | 8 |
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் | 2 | 0 |
| நாயன்மார் வரலாறு | 1 | 8 |
| தமிழ்ச் சோலை அல்லது கட்டுரைத் திரட்டு—இரண்டு பகுதி | 3 | 0 |
| சைவத் திறவு | 0 | 8 |
| தமிழ் நாடும் நம்மாழ்வாரும் | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானவரும் | 0 | 4 |
| சித்த மார்க்கம் | 0 | 6 |

**சுவேதாரண்ய ஆசிரமம் புத்தக சாலை**

295, லிங்க செட்டி தெரு,

ஜி. டி. மதராஸ்.

"நமக்கு நல்ல ஆலோசனை சொல்லக்கூடிய ஆங்கிலேயரில் மிஸஸ் அனிபெஸண்டைப் பிரதான்யமாகக் கொள்ளலாம்—" என்றும், "தற்காலம் இந்தியராகிய நம் நிலைமையை அவர் நன்றாய் அறிந்திருக்கிறார்—" என்றும் புகழ்ந்திருக்கிறார்.

## ஐயர் அவர்களின் அரிய நற்போதனை.

(1) ஹிந்துக்களுக்குத் தேசாபிமானமும் மதாபிமானமும் ஒன்று.

(2) பிற்கால நிலைமைக்குத் தற்காலக் கல்விப் பயிற்சியே ஆதாரம்.

(3) நடிகர்களைவிடப் பார்ப்பவர்களுக்கு ஆட்டத்தின் குற்றங் குறைகள் விளங்கும். அதுபோல் நம்மிடம் அநுதாபங்கொண்டவர்க்கே நம்முடைய குறைகள் தெரியும்.

(4) பரதகண்டமே ஹிந்துமதம்; ஹிந்து மதமே பரதகண்டம்.

(5) இந்தியர்களின் மதாபிமானம் இந்தியாவின் எல்லையைக் கடந்து செல்லக் கூடியதல்ல. அது இந்தியாவின் எப்பாகத்தையும் விலக்கக்கூடியதாயுமில்லை. ஆதலால் இவைகளே அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குப் போதுமான ஆதாரங்களாம்.

(6) ஒருமைப்பட்ட ஜனங்களுக்கு ஒரு பொதுவான பாஷை அவசியம். அது பிரிட்டிஷ் ஸ்தாபனம் ஏற்படும் வரையில் இல்லாமலிருந்தது. பிறகு ஆங்கில பாஷை அந்த ஸ்தானத்தை அடைந்தது. இப்போது அது செய்யும் உதவி அநந்தம். (உலகத்துக்கு ஒரு பொதுமொழி வேண்டுமென்பது கருத்து.)

(7) தேச நன்மையின் பொருட்டு நம் தலைவர் செய்யும் முயற்சி பயன்படவேண்டுமானால், அம் முயற்சி சாமான்ய ஜனங்கள் அறிந்துகொள்ளத்தக்க பண்புடையதாயிருத்தல் வேண்டும்.

(8) இந்தியர்களுடைய தற்கால நவீன எழுச்சியையும் பிற்கால லக்ஷ்யங்களையும் விசிறி ஜ்வாலை செய்வது தேச பாஷையில் ஜனங்களுக்கு விளங்கும்படி வாசக நடையில் எழுதப்படும் நூல்களாலேயே ஆக வேண்டும்.

(9) தேச பாஷைப் பத்திரிகைகளும் தேச பாஷையிலுள்ள நூல்களும் அதிகமாய்த் தோன்றி ஜனங்களுக்குச் சகாயம் செய்யாவிட்டால், ஜனநாயக முறை நிறைவேறுதல் அரிதாகும்.

(10) *அமைதியும் சமபாவனையும் உழைப்புமுள்ளவரே காரியசித்தி பெறுவர்.*

---

(136-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. "பெண் யாரோ? எப்படி இருப்பாளோ? அம்மா, அப்பா என் சம்மதத்தை கேட்டால், என்ன பதில் சொல்லுவது?" என்று திகைத்துக் கொண்டு இருக்கும் சமயம்.

சுமித்ரா வந்து ஒரு பதுமை போல் நின்றாள். "கிருஷ்ணய்யரை நமஸ்காரம் செய்" என்றார் சுவாமிநாதய்யர். மாதவனுக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. "தெய்வமே! நீ இல்லை என்று நினைத்தேன். நீ என் நினைப்பைப் பொய் ஆக்கி விட்டாயே!" என்று நினைத்தான்.

மாதவனும், சுமித்ராவும் தம், தம் கண்களினாலேயே தங்கள் பிரியத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். கல்யாணி, கிருஷ்ணய்யர், மாதவன் வீடு திரும்பி வாத்தியாரை வரவழைத்து நாள் பார்த்தார்கள். முகூர்த்தம் தை மாதம் 4-ந் தேதி மிகவும் விமரிசையாய் நடந்தேறியது.

# ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம்

[கா. சி. வேங்கடரமணி]

பாடம் 4






| | |
|---|---|
| சிங்கம் | புலி |
| கரடி | சிறுத்தைப்புலி |
| ஓநாய் | கழுதைப் புலி |
| காட்டுப் பன்றி | முள்ளம் பன்றி |
| நரி | குள்ள நரி |

குழந்தை, மணி, இவைகள் எல்லாம் காட்டில் இருக்கும் மிருகங்கள். இவைகளை நீ எப்பொழுதாவது பார்த்திருக்கிறாயா?

பார்த்திருக்கிறேன்.

எங்கே பார்த்திருக்கிறாய்?

பீபில்ஸ் பார்க்கில் பார்த்திருக்கிறேன்.

மிருகங்களில் இரண்டு வகைகள் உண்டு. இதரப் பிராணிகளைக் கொன்று தின்று பிழைத்துவரும் மிருகங்கள் ஒரு வகை. இவைகள் கொடிய மிருகங்கள். தேக வலுவும் கூர்மையான பற்களும் நகங்களும் உடையவைகள். இவைகளால் நமக்கு ஒன்றும் பயனில்லை. தீங்கே யொழிய, நன்மையே கிடையாது.

ஒரு ஜீவனை அழித்து மறு ஜீவன் பிழைத்தால், மணி, எப்பொழுதும், காட்டிலும் சரி வீட்டிலும் சரி, அந்த வாழ்வு வீண் வாழ்வுதான். அதற்கு இதுவேசாக்ஷி.

காட்டிலிருக்கும் மற்றொருவகை மிருகங்களைப் பற்றி, நாளைய தினம் படத்துடன் எழுதிக் கொண்டு வா.

குள்ள நரியை நீ எப்பொழுதாவது பார்த்திருக்கிறாயா? ஏதாவது குள்ளநரிக் கதை உனக்குத் தெரியுமா? பஞ்ச தந்திரக் கதைகளில் இரண்டை உனக்கு சொல்லச் சொல்லி, உன் தாத்தாவை வீட்டில் கேள்.

இன்ஷ்யூர் செய்யுங்கள்

# ஜூபிடர் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும்.

ஆயுள் - மோட்டார்கார்
நெருப்பு - பஸ்கள், டாக்ஸிகள்
கப்பல் - தொழிலாளர் நஷ்ட ஈடு.

சாதனம் சமுத்திரம் ரயில்வே தபால் சாதனம்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி,
வாக்களிக்கப்பட்ட மூலதனம்
ஒன்றரைக் கோடி ரூபாய்.

எங்கும் ஏஜண்டுகள் தேவை.

பிராஞ்சு ஆபீஸ்:
99, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

பிராஞ்சு மானேஜர்: N. வெங்கடராம அய்யர்.

# "குழக்கட்டை—கிருஷ்ணன் தூது"

"தராசு"

"இதென்னடா குழக்கட்டை—கிருஷ்ணன் தூது? இதுவரை கேட்காததாக இருக்கிறதே? குழக்கட்டை கிருஷ்ணன் சென்ற தூதா? குழக்கட்டைக்காக கிருஷ்ணன் சென்ற தூதா? குழக்கட்டையிடம் கிருஷ்ணன் சென்ற தூதா அல்லது கிருஷ்ணனிடம் குழக்கட்டை சென்ற தூதா?" என்றெல்லாம் சந்தேகப்பட வேண்டாம். "கிருஷ்ணன் தூது" என்ற படமும், அத்துடன் காட்டப்படும் "குழக்கட்டை" என்ற ஹாஸ்யப் படமும் சேர்ந்ததே இத்தலைப்பு.

மஹாபாரதத்தை முன்னும் பின்னும் இழுத்து, சிருஷ்டிக்கப்பட்ட படம் இக் கிருஷ்ணன் தூது. பாண்டவர்கள் சார்பில் கிருஷ்ணன் துர்யோதனனிடம் சென்ற தூதுதான், இக்கதையின் அடிப்படை. கதை நீளுவதற்காகப் பாரதத்தை மேற்கூறிய விதம் செய்து, அநேக விஷயங்களைச் சேர்த்திருக்கிறார்கள்.

வசனம் நன்றாக இருக்கிறது. அதைப் பேசியவர்கள் நன்றாகப் பேசவில்லை. ருக்மணி, பாமா, கிருஷ்ணன், குந்தி இவர்கள் தான் கூடியவரை நன்றாகப் பேசுகிறார்கள். விதுரர் வீட்டில் விருந்து சாப்பிட்ட பசியைக் கிருஷ்ணன், வார்த்தைகளின் முடிவுகளை அடிக்கடி விழுங்கி, ஆற்றிக் கொள்ளுகிறார். குந்தியை "அத்தே" என்று அவர் கூப்பிடுவது சில ஸமயங்களில் காதில் விபரீதமாக விழுகிறது. தன்னை மறந்து, கிருஷ்ணன், இலக்கணத் தமிழில் அடிக்கடிக் கொச்சைத் தமிழைக் கலக்கிறார்.

பாட்டுகளை உயிரில்லாமல் பாடுகிறார்கள். "கபடநாடக (15) "ஜகஜ்ஜோதி" (18) "யமுனா விஹார" (24) என்ற பாட்டுகளைத்தான் கூடியவரை தேவலை என்று கூறலாம். ஆனால் இம் மூன்றும் கதைக்கே அனுவசியம். இதுபோலவே 2, 4, 8, 9, 10, 16, 17, 19, 20, எண்கள் கொண்ட பாட்டுகளும் அனுவசியம். இவைகள் கதையின் வேகத்தைக் குறைக்கின்றன. நன்றாகவும் பாடப்படவில்லை. பாட்டுகள் '1, 2, 3, 4 களில் காட்டப்படும் அனுவசியக் கதைகளைக் குறைப்பது நலம். பாடுகிறவர்கள் அனைவரும் தலைகளையும் உடல்களையும், அனுவசியமாக ஆட்டிக் கொள்வதை நிறுத்தியிருக்கலாம்.

படப்பிடிப்பு மிகவும் ஸாதாரணந்தான். சில இடங்களில் வெளிச்சக் குறைவும், ஷாட்டுகளின் கோர்வையில் தப்பிதங்களும் இருக்கின்றன. ருக்மிணியும், பாமாவும் சண்டை போடும் போது, கோபத்துடன் பேசும் ருக்மிணியை எடுத்திருக்கும் "க்ளோஸ் ஷாட்டுகள்" நன்றாக இருக்கின்றன. அதைப் போலவே படம் முழுவதும் கவனித்து எடுத்திருக்க வேண்டும்.

ஒலிப்பதிப்பும் ஸாதாரணம்தான். ஸம அளவிலேயே பதிவு செய்யப்பட்டிருக்கிறது (Flat recording). க்ளோஸ் ஷாட்டிலிருந்து, தூர ஷாட்வரை (Distant Shot) எல்லாவற்றிலும் சத்தம் ஒரே அளவில்தான் இருக்கிறது. பாட்டு, பேச்சு, இவைகள் தெளிவு இல்லாமல் அநேக இடங்களில் இருக்கின்றன.

காக்ஷி ஜோடனை நன்றாக இருக்கிறது. கிருஷ்ணனும் பலராமனும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவர்களுக்குப் பின்னால், "ஆகாயம்" எனத் தொங்கும் திரையைச் சுருக்கமின்றி அடித்திருக்கலாம். தேவேந்திரன் ஸபை மேகங்களுக்கிடையில் நடப்பது ஏன்? ஒரு ஸெட்டிங் மீதம் பிடிக்கவா?

உடைகள் விசித்திரமாக இருக்கின்றன. சட்டை, தலைப்பாகைகள் ஏன் என்று தெரியவில்லை. "கிழக் குருட்டு ஷா

ஆலம்" போல் திருதராஷ்டிரன் தோன்றுகிறுர்.

வேஷப் பொருத்தம், ருக்மிணி, பாமை, திரௌபதி, துர்யோதனன் ஆகியவர்களுக்குத்தான் இருக்கிறது. மற்றவர்களைக் காணச் சகிக்கவில்லை. போதாததற்கு "மேக் அப்பும்" சரியாக இல்லை. முகத்தில் வடியும் எண்ணையையும், வேர்வையையும் துடைக்காமலேயே அநேக இடங்களில் படம் பிடித்திருக்கிருர்கள். தாடி, மீசை, ஜடை முதலியவைகள் கவனித்துப் பொருத்தப்படவில்லை. திரௌபதியின் கடைக் கண்களில் அதிக நீளமாகக் கருப்புப் பென்ஸிலால் கோடு இழுத்து ஆபாஸப் படுத்தியிருக்க வேண்டாம். கிருஷ்ணன் முகத்தில் தோன்றும் சுருக்கங்கள், அவரை வயதானவராகக் காட்டுகிறது. Diffuser-களை உபயோகித்து, க்ளோஸ் ஷாட்டுகளை, Soft Focus-ல் எடுத்திருக்க வேண்டும்.

எடிடர் தன் வேலையைச் சரியாகக் கவனிக்காமல் அநேக இடங்களில் தூங்கி இருக்கிறுர். தொடர்ந்து வரும் ஷாட்டுகளின் தொடர்ச்சியைக் (Continuity) கவனிக்காமல் வேலை செய்திருக்கிறுர். கிருஷ்ணனும் ஸஹாதேவனும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, ஒரு ஷாட்டில் நின்றுகொண் டிருக்கிறுர்கள். ஆனல் அடுத்த ஷாட்டில், ஸஹாதேவன் உட்கார்ந்தபடி யோகம் செய்வதாகக் காட்டப்படுகிறது. ருக்மணியும், பாமையும் சண்டை போட்டுக் கொள்ளும் பொழுது, பாமையின் பேச்சில் காட்டப்படும் ருக்மணியின் Insert-களில் தோன்றும் ருக்மணியின் முகபாவத்திற்கும் அதற்கடுத்தாற்போல், கோபத்துடன் பேசும் ருக்மணியின் முகபாவத்திற்கும் ஸம்பந்தமே இல்லாதிருக்கிறது. Insert-க்குப் பொருத்தமான க்ளோஸ் ஷாட் இல்லை என்றுல் புதிதாக எடுத்திருக்கலாம். இல்லை என்றுல் Insert போடாமலேயே இருந்திருக்கலாம். இதற்குப் பதிலாக பொருத்த மற்ற இன்ஸெர்ட்டுகளைப் போடுவானேன்? ஸஹாதேவனும் கிருஷ்ணனும் பேசிக்கொள்ளும் பொழுது, ஒரு ஷாட்டை "அப்படியா" என்று முடித்து, அடுத்தஷாட்டை மறுபடியும் "அப்படியா" என்று கிருஷ்ணன் ஆரம்பிக்கிறுர். இரண்டு "அப்படியா"க்களும் படத்தில் இருக்கின்றன. ஒன்றை வெட்டிவிட வேண்டும். முதல் நான்கு பாட்டுகளின் ஒலி, படத்துடன் சரியாக இசைக்கப்படவில்லை. எல்லாம் இசைப்புத் தவறுகவே (Mis-sink) இருக்கின்றன. குறைந்தது 8 படங்கள் வித்தியாசத்தில் சப்தங்கள் வருகின்றன. இதை எடிடர் நிவர்த்தி செய்திருக்க வேண்டும்.

நடிப்பில், ஒரே ஒரு காக்ஷியில் வந்த போதிலும், ருக்மணிக்குத்தான் முதல் இடம். அடுத்த படியாக பாமை. பிறகு வரிசைக் கிரமமாக, கிருஷ்ணன், குந்தி, துர்யோதனன், கர்ணன் முதலியவர்கள்.

டைரக்டர் இவை யனைத்தையும் ஸஹித்துக் கொண்டு, பொறுமையை இழக்காமல் படத்தை முடித்தது போற்றத்தக்கதே. துவாரகையை வர்ணித்துக் காட்டுவதிலும், கிருஷ்ணனை வரவேற்கச் செய்யும் ஏற்பாடுகளிலும், பொறுமையின் எல்லையை அடைகிருர். "பொட்டையன், பொட்டைக் கிழவன், பிறவிக் குருடன்" என்று திருதராஷ்டிரனை பீமன் முதலியவர்கள் வைவதைக் கேட்பதில் பொறுமையின் எல்லையை அடைகிருர், டைரக்டர். இவரிடமிருந்து "பொறுத்தவர் பூமியாள்வார்" என்பதை தருமர் அறிந்து, பொறுமையின் அவதாரமாக இருக்கிருர் போலிருக்கிறது. நடுச் சபையில், துயில் உரிவதற்குமுன், திரௌபதி பாடுவதைப் பொறுமையுடன் துச்சாஸனன் கேட்டுக்கொண்டு, அவள் பாடி முடிப்பதற்காக காத்துக் கொண்டிருப்பதும் இப்பொறுமையின் மஹிமையையே எடுத்துக் காட்டுகிறது. கொடியோனும் இப்பொறுமைக்கு வசமாவதெனில், பொறுமையின் பெருமையை என்னவென்றுரைப்பது! பிச்சைக்காரன் குழக்கட்டைகளை எடுத்துச் சாப்பிடுவதைப் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கும், அருணசலத்திற்கும் அவன் மனைவி சுப்புத் தாயிக்கும் இருக்கும் பொறுமைக்குச்

சமமாகச் சொல்லலாம். ஆனால் இவ்விருவரும் இவ்விதம் பேசாமலிருந்ததற்குக் காரணம் குழக்கட்டை யாதலால், இப்பொறுமையின் பெருமை யெல்லாம் குழக்கட்டையின் மஹிமையே.

குழக்கட்டை என்ற ஹாஸ்யப் படத்தில், நதிக்கரையில் (?) தனியாக ஜலமெடுத்துக் கொண்டிருக்கும் ஒருத்தியை, “உங்கள் வீடு எங்கிருக்கிறது” என்று ஒரு வெறும் தடியன் கேட்கிறான். “என் புருஷன் ஊரிலில்லை. ஆகையால் பகலில் சாப்பாடு கிடையாது” என்று சொல்லும் அவளை “அப்பொழுது ராத்திரி......” என்று அத்தடியன் கேட்கிறான். குழக்கட்டையின் பெயர் நினைவுக்கு வராமல் “முழு மொட்டை, மரப்பட்டை” என்று அர்த்த மற்ற “ட்டை” என்று முடியும் வார்த்தைகளாகப் பேசுவது முதலியவைகள் ஹாஸ்யமாக விளங்குகின்றன. பிராஸத்திற்காக, அர்த்த மற்ற பேச்சை நுழைத்தவர்கள் “நோகாமல் அடித்தேனே, விடாமல் அழுதேனே, போகாமல் வந்தேனே என்ற இடத்தில் “விடாமல் அழுதேனே” என்று பிராஸத்தை விட்டுப் பேசுவானேன். “விடாமல் அழுதேனே” என்பதைக் காட்டிலும் “ஓயாமல் அழுதேனே” என்பது பொருத்தமாக இருக்குமே? அர்த்தமற்ற பேச்சுகளில் தான், பிராஸம்போட, வசனமெழுதியவருக்குத் தெரியுமா?

குழந்தைகளைத் தூங்கப் பண்ண நம் பாட்டிமார்கள் சொல்லும் “ஹத்ரிமாக், போகாத விருந்தாளி, வெற்றிலை அனக்தய்யன்” என்ற மூன்று கதைகளைச் சேர்த்துக் குழக்கட்டையாகப் பிண்டம் பிடித்திருக்கிறார்கள். இக்குழக்கட்டையின் “படப் பிடிப்பு, ஒலிப் பதிவு” இரண்டும் நன்றாக இருக்கின்றன. “இப்போ நான் செய்த தந்திரம்” என்ற பாட்டை நன்றாகப் பாடுகிறார்கள்.

ஸமயா ஸமயம் தெரியாமல் ‘க்ளோஸ் அப்’ மயமாகப் படம் எடுக்கும் கோஷ்டி ஒன்று. “க்ளோஸ் அப்” கொடுப்பதென்றால் உயிரைவிடும் கோஷ்டி மற்றொன்று. இந்த இரண்டாவது கோஷ்டியைச் சேர்ந்தவர் குழக்கட்டை....டைரக்டர். அவசியமான இடத்திலும் “க்ளோஸ் அப்” கொடுக்காமல் க்ளோஸ் அப் பஞ்சத்தைத் தடுத்திருக்கிறார். உதாரணமாகப் பிச்சைக்காரன் குழக்கட்டையைத் தின்னும்பொழுது, சுப்புத்தாயும் அருணாசலமும் படும் அவதியைக் கோர்வை ஷாட்டிலே, பிச்சைக்காரனுடன் சேர்த்துக் காட்டுவதைச் சொல்லலாம். இவ்விடத்தில் அவ்விருவரும் நன்றாக நடித்திருக்கிறார்கள். “க்ளோஸ் அப்பில்” ஒவ்வொருவராகக் காட்டி இருந்தால், அவர்கள் முகபாவங்களும், வலிப்புகளும் நன்றாகத் தெரிந்திருக்கும். விறு விறுப்பாகவும் இருக்கும். குழக்கட்டை திருடிய அருணாசலத்தைக் குப்பு அடிக்கும் பொழுது, ஊர்க் குழந்தைகள் குழக்கட்டைகளைக் கொள்ளை யடிப்பதாகக் காட்டி, குப்புவின் சேஷ்டைகளையும், குழந்தைகளின் கொம்மாளத்தையும் காட்டுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். இதை மறந்தது ஏன்? குழக்கட்டை பஞ்சம் வரும் என்றா? அப்படி என்றால் இப்பயமே வேண்டாம். தஞ்சமென் றடைந்தவரைக் காத்திட, “அஞ்சுகை கணேசர்” ஆதரவிருக்கும் வரை, இப்பஞ்சமே வராதென்று, நெஞ்சறியச் சிறிதும் வஞ்சமின்றிப் பஞ்ச பூதம் தெரிந்திடப் பஞ்சாமிருதம்போல் இனித்திடக் கொஞ்சமும் அஞ்சிடாது கூறிடுவேன், இனி அஞ்சிட வேண்டாம், தஞ்சிடவும் வேண்டாம், குழக்கட்டை தாஸர்களே!